நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Offictal Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 4—6—1978 | இதழ் 38

கலைஞர் பிறந்த நாள் சிறப்பிதழ்



தமிழகத்துக்குக் கலைஞரை ஈந்த
தந்தை முத்துவேலர் அன்னை அஞ்சுகம்

விலை 60 காசு

கன்னித் தமிழ் காக்கக் காலமெலாம் உழைக்கின்ற
தன்னிகரில்லாத் தலைவ தமிழ்போல் வாழ்க! வாழ்க!

- ஆசிரியர்குழு

தமிழர்களுக்குப் புதுவாழ்வு தந்தவர்

-: தந்தை பெரியார் :-

கலைஞர் அவர்கள் நமக்குக் கிடைத்திருக்கிற அரிய பொக்கிஷமாகும். மற்ற மாநிலங்களைவிட நமது தமிழகத்தின் பெருமை போற்றப்படுவதற்கு காரணம் நமது முதல்வரின் தனித் திறமையாகும்.

கலைஞர் அவர்கள் நமக்கு கிடைத்தற்கரிய வாய்ப்பு என்று சொல்ல வேண்டும். இதற்குமுன் ஆட்சியில் இருந்த கட்சிக்காரர்களைவிட பகுத்தறிவாளராவார். மனிதர்களை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அதாவது நம்பிக்கையாளர்கள், பகுத்தறிவாளர்கள் என்பதாகும். முன்னோர்கள் சொன்னது பழைய காலம் முதல் இருந்து வருவது என்பதற்காக எதையும் சிந்திக்காமல் கடவுள் — மதம் — ஜாதி - சாஸ்திரம் என்கிற பெயரால் பல மடமைகளை சிந்திக்காமல் ஏற்றுக் கொள்பவர்கள் நம்பிக்கையாளர்கள் ஆவார்கள். அறிவைக் கொண்டு ஆராய்ந்து அறிவிற்கும் ஏற்றதை ஏற்றுக் கொண்டு மற்றதைத் தள்ளிவிடக் கூடியவர்கள்பகுத்தறிவாளர்கள் ஆவார்கள். இதில் நம் நாட்டில் நம்பிக்கையாளர்கள் என்பவர்கள் தான் அதிகம். பகுத்தறிவாளர்கள் இருப்பது மிக மிகக் குறைவேயாகும்.

நமது முதல்வர் கலைஞர் அவர்கள் தலைசிறந்த பகுத்தறிவுவாதி ஆவார். இந்தியாவை எடுத்துக் கொண்டால் இந்த ஒரு நாட்டைத் தவிர மற்ற நாடுகளில் நடைபெறுகிற ஆட்சியாவும் நம்பிக்கையாளர் ஆட்சியாகும். நம் நாட்டில் மட்டும்தான் பகுத்தறிவாளர் ஆட்சி நடக்கிறது.

தி. மு. க. ஆட்சியின் கொள்கை நமது மக்களுக்கு நன்மை செய்வதேயாகும். இந்தியாவில் எந்த நாடு அமைதியோடு இருக்கிறது? தி.மு.கழகத்திற்குப் பெரு வெற்றி என்றால் அது கலைஞர் தனது சாதுர்ய திறமையால் பெற்றதாகும்.

இத்தகைய பகுத்தறிவாளராகவும் ஆட்சிக் கலையில் அரிய ராஜதந்திரியாகவும், முன் யோசனையுடனும், அவர் நடந்து வருவதின்மூலம் தமிழர்கட்கு, புதுவாழ்வு தருபவர் ஆகிறார் நமது முதல்வர். அவர் பல்லாண்டு வாழ்ந்து, அவர் பணி வெற்றியடைய வேண்டுமென ஆசைப்படுகிறேன்.

(கலைஞர் 48-வது பிறந்தநாள் மலர் 1971)

கலைஞரின் வெற்றிக்கான காரணங்கள்!

-: முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் :-

தமிழ்ப் பற்று உள்ளவர்களால் மட்டுமே தமிழகத்தை ஆள முடியும்; அதற்கு சேர சோழ, பாண்டிய மன்னர்களின் ஆட்சி தமிழகத்தில் 2000ம் ஆண்டுகள் நிலைத்து நின்றதும் பல்லவ, சாளுக்கிய, தெலுங்கு மகாராஷ்டிர, இந்துஸ்தானி ஆங்கில ஆட்சிகள் அனைத்தும் அழிந்துபோனதுமே சான்றாகும். அண்மையில்கூட இந்தி வெறி பிடித்தாடிய காங்கிரஸ் ஆட்சி தமிழகத்தை விட்டு ஒழிந்து போனதும் இதன் பொருட்டேயாகும்.

தமிழ் மக்கள் வீர மரபினர். அவர்கள் வாளோடு முன் தோன்றியவர். அதனாலேயே உலகம் முழுவதும் வெற்றி கண்டு ஆண்ட மகா அலெக்சாண்டரின் படை இந்தியாவைப் பிடித்தும் தமிழகத்திற்குள் நுழைய முடியாது போயிற்று. இந்தியா முழுவதும் ஆண்ட அசோகச் சக்ரவர்த்தியின் காலத்தில் கூட அவரது படையும் கொடியும் காவிரிக் கரையைத் தாண்டி தெற்கே வர முடியாமல் தவித்தது. இதற்குக் காரணம் தமிழ் மக்கள் நாட்டையும், மொழியையும் உயிரினும் மேலாகக் கருதிப் போரிடும் வீர மரபினர் என்பதேயாகும்.

தமிழே அறியாத — தமிழ்ப் பற்று அற்ற — இந்தி வெறி பிடித்த மக்களால் தமிழகம் ஆளப்படும் கொடுமையைக் கண்டு வருந்திய புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் மனம் புழுங்கி அவர்களுக்கு கொடுத்த முதலடி “தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ் நாட்டில் முதலமைச்சராய் வருதல் வேண்டும்” என்பதே அக்கனவை நினைவாக்கியவர் இருவர், ஒருவர் அறிஞர் அண்ணா, மற்றவர் கலைஞர் கருணா

அறிஞர் அண்ணா நல்ல தமிழில் பேசி, நல்ல தமிழில் எழுதியே தனது பொதுத் தொண்டைத் தொடங்கினார். வெகு விரைவில் மக்களின் உள்ளத்தில் இடம் பெற்று, கட்சியின் தலைவனாகி காஞ்சியின் தலைவனாகி, தமிழகத்தின் தலைவனாகி, இந்தியப் பாராளுமன்றத்திலும் நுழைந்து இந்தியத் தலைவர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார்.

இன்னும் சில ஆண்டுகள் இருந்திருப்பின் உலகத் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்திருப்பார். என் செய்வது? மறைந்துவிட்டார். அவரது மறைவு தமிழகத்திற்கு ஒரு இடி எனினும், அவரது உடலை மறைத்துக் கொண்டிருக்கும் இடம் இன்று ஒரு திருக்கோவிலாக — வழிபடுமிடமாகத் திகழ்ந்து வருகிறது.

இனி நாடு என்னாகும்? மொழி என்னாகும்? என்ற கேள்விகள்தான் அன்று தமிழகத்தில் கேட்கப் பெற்று வந்தன. இன்று அக்குறையே தெரியாமல் தமிழகம் இருந்து வருகிறது. அதற்குக் காரணம் எழுத்துக் கலைஞர், பேச்சுக் கலைஞர் கவிதைக், கலைஞர் உரைநடைக் கலைஞர், காவியக் கலைஞர் ஓவியக் கலைஞர்; நாடகக் கலைஞர் நடிப்புக் கலைஞர், பொருளாதாரக் கலைஞர் மட்டுமல்ல, அரசியல் கலைஞருமாக இன்று நம் கலைஞர் இருந்து வருகிறார்.

இந்த அளவுக்கு கலைஞர் ஆற்றல் படைத்திருப்பதற்குக் காரணங்கள் மூன்று ஒன்று எல்லோரிடத்திலும் இனிமையாகப் பேசி இயன்ற வரையில் உதவி, வைதிடுவோரையும் வாழ்த்தப் பழகி. வாழ்த்தக் கேட்கின், தாழ்த்திக்கொண்டு ஏழை மக்களோடு ஏழை மகனாய்ப் பழகி வருவது; மற்றொன்று கல்வி கேள்வி, அறிவு, ஆராய்ச்சி அருந் திறன் ஆகிய ஐந்தும் நிறைந்த அன்பர்கள் பலர் உடனிருந்து வருவது. இன்னொன்று எவ்வித தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கும் இளைஞர்கள் பலர் கட்சியில்நிறைந்து இருப்பது. இம் மூன்றுமே கலைஞரது வெற்றிக்குப் பெருங் காரணங்களாகும்.

கலைஞர் அவர்கள் இன்னும் பன்னெடுங்காலம் நல்லுடல் நலத்துடனிருந்து நாட்டிற்கும், மொழிக்கும், மக்களுக்கும் நற்றொண்டு செய்து நல்வாழ்வு வாழவேண்டுமெனவும் முழு மனதுடன் வாழ்த்துகிறேன்.

இவரது 60 ஆம் ஆண்டு, மணிவிழாவையும் மிகச் சிறப்பாக நடத்தி மகிழத் தமிழகம் காத்திருக்கிறது.

வாழட்டும் தமிழகம்!

வளரட்டும் தாய்மொழி!

முன்னோராய் வந்தவன்!

புலவர் வெற்றியழகன் - சென்னை.

புனலாறு காவிரிக் கரையினைப்
புகழுடன் நிறுவிய கரிகாலன்
இனமானங் காத்திட வடவரின்
இறுமாப் படக்கிய குட்டுவன்
கனிமொழி தமிழினைக் காத்தநற்
கயற்கொடிப் பாண்டிய மன்னனுந்
தனியாகத் தமிழரைக் காத்திடத்
தமிழவேள் கலைஞராய்ப் பிறந்தனர்!
முல்லைக்குத் தேரீந்த பாரியும்
முழுக்கொடைப் பேர்பெற்ற ஓரியும்
இல்லையென களித்திட்ட காரியும்
இறைச்சியைப் படைத்திட்ட நள்ளியும்
நெல்லிக்க னிகொடுத்த அதியனும்
மயிலுக்குத் துகில்தந்த பேகனும்
எல்லோரும் இன்றிவணொன் றாகியே
எம்கலைஞர் உருவினில் வந்தனர்!
சிலம்பினைச் செய்திட்ட இளங்கோவுஞ்
சீராமக் கதைதந்த கம்பரும்
நலம்பொலியும் மேகலையின் சாத்தனும்
நம்பியகப் பொருள்தந்த நம்பியுங்
கலக்கமிற் கவிகாள மேகமுங்
கனவெற்றி கொண்டானுங் கவிஞனுந்
துலங்குகின்ற கலைஞரெனும் உருவினில்
தூமணியாய் ஒன்றாகி வந்தனர்!

என் தம்பியின் கைவண்ணம்!

கண்டனம்—கேலி—மிரட்டல்—சர்க்காருக்குத் தூபமிடல்—இவ்வளவும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

கையைப் பிசைந்து கொள்கிறார்கள் சிலர்—கண்களைக் கசக்கிக் கொள்கிறார்கள் வேறு சிலர்—விம்முகிறார்கள் சிலர்—ஆத்திரத்தைக் கொட்டிக் காட்டுகிறார்கள்!

மக்களோ—காண்கிறார்கள்; களிப்படைகிறார்கள்; மீண்டும் மீண்டும் பார்க்கிறார்கள்; மேலும் மேலும் மகிழ்ச்சியடைகிறார்கள்; குடும்பம் குடும்பமாகக் காண்கிறார்கள்; வீடுதோறும் வியந்து வியந்து பேசுகிறார்கள்!

நெஞ்சு நெகிழ்கிறது—உருக்கமான கட்டங்களைக் காணும்போது! கண்களிலே கனலும் புனலும் கொப்பளிக்கிறது—பல கட்டங்களில்! வேறு கட்டங்களில் விலாவலிக்கச் சிரிக்கிறார்கள்; சில கட்டங்களில் கிழவன் குமரனாகிறான்!

மொத்தத்திலே, புதியதொரு மகிழ்ச்சி; ஆனால், நீண்ட நாட்களாகத் தேடிக்கொண்டிருந்த மகிழ்ச்சியைப் பெறுகிறார்கள் மக்கள்!

கண்டனம் மடிகிறது; படம்—ஓடுகிறது—ஓடுகிறது—ஓடிக் கொண்டே இருக்கிறது!

உலுத்தர்கள் குரலை அடக்கியபடி—ஊராள்வோரின் மிரட்டலைக் கண்டு அஞ்சாமல்—நொந்து போனவர்களின் தூற்றலைக் கண்டு புன்னகை புரிந்தவண்ணம் பராசக்தி பவனி வருகிறாள்! பதர்—காற்றிலே பறந்துபோகிறது; செந்நெல் குன்றெனக் குவிகிறது

வெற்றி படம் பிடித்தவர்களுக்குக் களிப்பூட்டும் விதமாக மட்டுமல்ல—பகுத்தறிவாளரின் மனம் குளிரும் விதமாக மட்டுமல்ல—படவுலகினருக்கே புதியதொரு பாதையைக் காட்டும் விதமாகக் கிடைத்திருக்கிறது!

வீணர்கள், சொல்லம்பு வீசுகிறார்கள்—மக்கள், வெள்ளித் தோட்டாக்களை வீசியபடி உள்ளனர்!

விஷமக்காரர்கள், விபரீதமான குற்றச்சாட்டுகளைக் கக்கிக் கொண்டே இருக்கிறார்கள்—மக்கள், பராசக்திக்கு மகிழ்ச்சி மாலைசூட்டி அழகு பார்க்கிறார்கள்!

நரிகள் ஊளையிடுகின்றன; சிங்கம் கர்ஜனை புரிகிறது; ஊளையைக் கேட்டு அல்ல—வீர முழக்கம் செய்யும் விதமாகப் 'பராசக்தி' வெற்றிகரமாக நடை—பெறுகிறது!

பொல்லாங்குக்காரர்களும்—போக்கிட மற்றவர்களும், வாயில் வந்ததைப் பேசிக் கொண்டிருக்கத்தான் செய்கிறார்கள்!

அதோ—உள்ளே நுழையக் காத்துக் கொண்டிருக்கும் கூட்டம்!

இதோ—கண்ட பிறகு கொண்ட களிப்பை மற்றவருக்குக் கூறிடும் இளைஞர்கள்!

அங்கே.. ஓர் அபலை; ஆம்—படத்திலே கண்ட பாவையுடன் தன்னை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளும் நிலையில்

இதோ—ஒரு பகல் வேடக்காரன்; படத்திலே பார்த்தவனைப் போலவே காணப்படுகிறான்!

ஊரார் உரையாடல் இப்படியெல்லாம் அமைந்திருக்கிறது; உலுத்தர்களோ, 'இது என்ன அக்கிரமம்; பராசக்தியைக் கேவலப்படுத்துகிறார்களே, பாவிகள்; படமா இது—சர்க்காரா நடைபெறுகிறது' என்று பேசுகிறார்கள்—இல்லை, இல்லை—ஏசுகிறார்கள்; ஆனால், அக்கம் பக்கம் பார்த்துவிட்டு ஏசுகிறார்கள்! ஏனெனில்,

அறிஞர் அண்ணா

நாளாக ஆக, 'பராசக்தி' யின் ஆதரவாளர் அணிவகுப்பு வளருகிறது; அருவருப்போர் முகாம் கலைகிறது!

'பராசக்தி'—வெற்றிகரமான படம் மட்டுமல்ல; வீணர்களுக்கும்—வெறியர்களுக்கும் தக்க பாடம் தருகின்ற பள்ளியாகவும் இருக்கிறது!

இத்துணை வெற்றிக்கும் அடிகோலியவர்—ஒருபுறம் கண்டனமும், மற்றொருபுறம் பேராதரவும் கிடைக்கும் வெற்றிக்கு அடிகோலியவர்—அரும்பு மீசை—அதுவும் இல்லை—மீசை அரும்புவிடும் வயதிலே உள்ள பகுத்தறிவு உலகப் பணியாளன்—கருணாநிதி எனும் பெயருடையான்—என் அருமருந்தன்ன தம்பிமார்களில் ஒருவன்; 'தம்பி உடையான் படைக்கஞ்சான்' என்பது ஆன்றோர் மொழி; என் தம்பிகள், இப்படிப்பட்டவர்கள்; அவர்கள் தரும் 'பராசக்தி' நாட்டு மக்களுக்கு நலனும், குறைமதியாளர்களுக்கு நடுக்கமும், நச்சுநினைப்பினருக்கு ஆத்திரமும் ஊட்டத்தான் செய்யும் ஊட்டத்தான் செய்கிறது!

'பராசக்தி' தீட்டித் தந்ததன் மூலம், நாட்டவருக்குத் தந்ததைவிட அதிகமான மகிழ்ச்சியை எனக்கு அளித்த கருணாநிதியின் 'கலைத் திறன் வளர்க' என்று நல்லுரை கூறும்படி கலையிலும்—பகுத்தறிவுப் பணியிலும் அக்கறை கொண்டோர் அனைவரையும் வேண்டுகிறேன்.

தமிழகம் இத்தகு திறமையைப் போற்றி வளர்க்க வேண்டும்.

கலைத் துறையிலே இவ்விதமான புது ஒளி மேலும் மேலும் தேவை

கருணாநிதியின் திறமை வளர்ந்து வரும் மறு மலர்ச்சியின் நன்மலர்; மேலும் பல மலர்கள் வேண்டுகிறேன்; இல்லை, இல்லை-என் ஆசை அந்த அளவுடன் அடங்காது; நான் ஒரு பூந்தோட்டமே காண விரும்புகிறேன்.

பகுத்தறிவு தரும் படங்களின் எண்ணிக்கை வளரவேண்டும் என்ற அளவோடு என் ஆசை அமையவில்லை; பட உலகு பகுத்தறிவுக்கே பயன்படும் நிலைமையைக் காண விரும்புகிறேன்—அது முறையும்கூட!

'பட உலகு' என்ற ஒன்று எங்ஙனம் கிடைக்க முடிந்தது?

ஒளியையும்—ஒலியையும், நிழலையும் ஒன்றாகக் கோத்துப் படமாக்கித் தந்திடும் முறையும்—கருவியும் கிடைத்தது எங்ஙனம்?

அமைதி உபவாசத்தாலா—ஆண்டாள் கிருபையாலா—அய்யனாரப்பன் வரவாலா—இல்லையே; பகுத்தறிவாளர்கள் விஞ்ஞானத் துறையை வளர்த்ததால்!

எனவே, 'பட உலகு பகுத்தறிவுக்கே பயன்படல் வேண்டும்' என்று நான் கூறுவது என் ஆசை மட்டுமல்ல—உரிமையும் கூடத்தான்!

'பராசக்தி' படத்தைத் தயாரித்துத் தமிழகத்துக்குத்தந்த நண்பர் பெருமாள் படம் துவக்கும் நாட்களிலேயே என்னிடம் கலந்து பேசினார்; நான் அவருடைய எண்ணத்தை வரவேற்றேன்.

தோழர் கருணாநிதியைக் கொண்டு திரைக்கதையைத் தீட்டுவது என்ற ஏற்பாட்டுக்கும் நான் ஓரளவு பொறுப்பாளி

எனக்கு நன்றாகத் தெரியும் தோழர் பெருமாள் பெருமை கொள்ளக் கூடிய வகையிலே கருணாநிதியின் 'ஓவியம்' இருக்கும் என்பது; இன்று நாட்டு மக்களோ இதை ஏற்றுக் கொண்டு விட்டனர்!

பராசக்தியின் அருளால், இன்று திராவிட நாட்டுப் பண் தமிழகமெங்கும் ஒலிக்கிறது

'பராசக்தி' பகுத்தறிவுக் கணைகளைக் கொண்டுபகல்வேடக்காரர்களையும், மத வேடக்காரர்களையும் தாக்கிய வண்ணம் இருந்திடக் காண்கிறோம்!

[1952ல் பராசக்தி திரைப்படம் வெளிவந்தபோது 'போர் வாள்' சிறப்பு மலரில் பேரறிஞர் அண்ணா எழுதிய கட்டுரை]

அவர் இதயம் எங்கள் குடியிருப்பு!

—: மீ. சு. இளமுருகுபொற்செல்வி :—

தமிழகத்தின் வரலாறு எப்போதுமே தனிச் சுவையுடையது தான்!

தமிழனை மாற்றான் வாகைசூடினான் என்று சொல்ல முடியாது என்றாலும் மாற்றானிடம் தமிழனே தமிழனைக் காட்டிக் கொடுத்தான் என்ற வரிகள் எவ்வாறோ இடம் பிடித்துவிடுகின்றன!

இந்தச் சோக வரிகள் கடந்த காலத்துடன் முடிந்ததாக ஆகி விடாமல் தொடர்வது என்ற நிலையைக் காணும் போது சோர்வும் சோகமும் அல்ல சூடும் சொரணையுமல்லவா மரத்துப் போய் விடுகிறது!

ஏன் யார் தெரியுமா? என்ற வினாவும் விடையும் கேட்பதற்கு வேண்டுமென்றால் பயன்படுமே தவிர செயல்படுவதற்கு உதவாது.

தமிழக வரலாற்றில் அவ்வப்போது தன்மானங் காக்க அரசரோ, புலவரோ இடம் பெறுவதுதான் வழக்கம். ஆனால் நம் காலத்தில் ஆட்சித் திறனும், கல்வி நலனும், இரக்க சிந்தனையும் ஒருங்கே பெற்ற கலைஞர் துணையிருக்கிறார்.

தன் மீது வீசப்படும் 'மாசு'களைப் பற்றிக் கவலை கொள்ளாது—தமிழகத்தின் நலனில் தமிழ்மொழியின் பெருமையில், தமிழர் தம்வாழ்வு வளத்தில் தன்னை முழுமையாக ஈடு கொடுத்து ஏற்றம் தந்து கொண்டிருக்கிறார் கலைஞர்.

எத்தனை பொய் வழக்குகள்—எத்துணை பொறுமைப் பேச்சுகள்—எத்துணை இழிமொழிகள் எதைப் பற்றியும் கவலை கொள்ளாது தனது பேச்சு மூச்சு செயல் யாவையும் தமிழர் வாழ்வுக்கு வழங்கி வாழுகின்ற ஒப்பற்ற ஒருமாமனிதர் கலைஞர்.

அவருடைய ஆற்றலுக்கு அண்ணா சதுக்கம், வள்ளுவர் கோட்டம் பூம்புகார் கட்டபொம்மன் கோட்டை போன்ற பல அமைப்புகள் நான் முந்தி நீ முந்தி என்று முரசறைந்து கொண்டிருக்கின்றன.

செயல் திறனுக்கு அரசு அலுவலர்களின் குடும்ப நலப் பாதுகாப்பான ரூபாய் பத்தாயிரம் ஒன்றே போதும்,

அவருடைய அன்புக்கு எடுத்துக் காட்டு—நாடு நெருக்கடி என்ற பெயரால் வேட்டையாடப்பட்டுக் கொண்டிருந்தபோது—எனது மகன் மருமகன் இருவருடைய உயிரையும் எடுத்துக் கொண்டு கழகக் கண்மணிகளை உடன் பிறப்புகளை விடுதலை செய்க" என்ற அறிவிப்பே சான்று.

ஒரு செய்தி அண்மையில் நடந்தது. பொதுவாக நடந்து போகின்றவர்கள்தான் காரில் போகின்றவர்களைக் கவனிப்பது வழக்கம். ஆனால் தலைவர் கலைஞர் தாம் எந்த நிலையிலும் தனது உடன் பிறப்புக்களைக் கவனிப்பவர் என்பதற்கடையாளமானதாகும். நான் ஆழ்வார்பேட்டைக்குப் பக்கத்தில் நடந்து வருகிறேன் தலைவரின் கார் அப்போது அந்தப் பக்கம் போயிருக்கிறது. நான் கவனிக்கவில்லை. தலைவர் மறுநாள் பரிவோடு கேட்கிறார். 'என்ன நேற்று அந்தப் பக்கம் நடந்து வந்திர்களே எங்கே போய் வந்தீர்கள்? என்று.

(15-ம் பக்கம் பார்க்க)



பழந்தமிழ்க்கலையெனவாழ்க!

பேராசிரியர் க. அன்பழகன்

கடமையே கண்ணாகும்! காலம் பொன்னாகுமென
கடமையே காலமெல்லாம் மேற்கொண்டான்!

கொள்கையே உயிராகும்! கழகமே உடம்பாகுமெனும்
கொள்கைக்கே மூச்செல்லாம் பேச்சாக்கினான்!

தமிழ் வளர்க்கும் பணியே தன்னுயிர் வளர்க்கும்பணியாய்த்
தமிழ் இனங்காக்கும் பணிக்கெனவே தன்னை
ஒப்படைத்தான்,

அண்ணா வகுத்தவழியே தமிழ்மானங் காக்குமெனப்
பண்ணார் தமிழ்க் காவலனாய்ப் பேர்பெற்றான்!

கழகத் தலைவன் அவன், கலைஞர் கருணாநிதி
பழந்தமிழ்க் கலையெனவே வாழ்க எந்நாளும்!

ஏன் சந்தேகம்?

ப.உ.சண்முகம்

“கலைஞர் கருணாநிதி பூட்டப்பட்டிருக்கும் பாளையங்கோட்டை சிறைச்சாலை எனது புனித யாத்திரை ஸ்தலம்” என்று காஞ்சித் தலைவன் “தாம்பரபரணி” ஆற்றங்கரையில் முழங்கினார். அந்தத் தலைவன் துயிலும் இடத்தை திராவிட இனத்தோரின் புனித யாத்திரை ஸ்தலமாக மாற்றிய பெருமை கலைஞருக்கு உண்டு.

அறிஞர் அண்ணா அவர்களின் அறிவுச் சிதறல்களை அவரின் அன்புத் தம்பிகள் தங்கள் திறமைக்கேற்ப சேகரித்து உழைப்பிற்கேற்ப பிரகாசிக்கச் செய்தனர். அறிஞர் அண்ணா அவர்களின் வார்த்தைகளை வைரமாக்கி எழுத்துக்களை எழுந்து நடமாடச் செய்தவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் ஆவார்கள்,

கலைத் தேடி அலைபவன் நல்ல எழுத்தாளனாக இருக்க முடியாது. அதே போல் வார்த்தைகளை வாரிக் கொட்டுபவனும் நல்ல எழுத்தாளன் அல்ல. தேவையான இடத்தில் தேவையான வார்த்தைகளை பயன்படுத்த வேண்டும்; இது எளிதான கலையல்ல. இந்தக் கலையினை அண்ணாவிடமிருந்து கலைஞர் ‘காபிரைட்’ பெற்றுள்ளார்.

தந்தை பெரியாரின் கொள்கைகளைத் தன் தீந்தமிழால் சுவையேற்றி அனைவரையும் ஏற்கச் செய்தார் அண்ணா அந்தக் கொள்கைளுக்குச் சட்ட

பேச்சுக்கலையும் எழுத்துக் கலையும் சிலருக்குத்தான் ஒட்டி வரும்: அந்த வரத்தை அறிஞர் பெருந்தகையிடமிருந்து வாங்கியவர்கள் வரிசையில் முதலாவதாக நிற்பவர் கலைஞர்தான்; சந்தேகமில்லை.

தர்மபுரி இடைத் தேர்தல் நடந்து முடிந்த நேரம்; காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. அந்தக் கட்சியின் தலைவராயிருந்த காலஞ் சென்ற திருகிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் “தர்மம் ஜெயித்தது” என்று அறிக்கைவிட்டார். அப்போது கண்வலியோடிருந்த கலைஞர் அவர்கள் ஆமாம்; ஓட்டுக்காகக் கொடுத்த “தர்மம் வென்றது” என்று பதில் அறிக்கை விட்டார் நுண்ணறிவோடு பதில் அளிக்கும் ஆற்றல் அறிஞர் அண்ணாவிடம் சற்ற பாடம்.

கலைஞர் அவர்கள் திறமையான எழுத்தாளர். வார்த்தை வடிவம் கொடுப்பதற்குள் இயற்கையின் கொடிய கரம் அவரைக் கவ்விச் சென்று விட்டது. அப்பெரும் பொறுப்பைக் கலைஞர் தலைமையில் கழகம் சுமத்திற்று. ‘எப்படியிருக்குமோ? என்ன ஆகுமோ? என்று சந்தேகப்பட்டோரும், சஞ்சலப்பட்டோரும் வியக்கும் வகையில், ஏன் பாராட்டும் விதத்தில் காரியங்களை நடத்திக் காட்டினார். காரியங்கள் நடக்கும் வேகத்தைப் பாராட்டி ஒலி பெருக்கி கிடைத்த நேரத்திலெல்லாம். “சிலம்பு” சங்க நாதம் செய்தது! ‘வள்ளலார் மடாதிபதி” புகழுரைகளைப் பொழிந்தார்! வார்த்தை ஜாலத்தில் வல்லவரான ‘வாரியார்கள்” வாழ்த்துக் கூறினர்!

ஆனால்...காலச்சுழல் காரணமாக, புயல் வேகத்தில் புகுந்த அவசர காலச் சட்டத்தால் அரசு கட்டிலின் கால்கள் முறியடிக்கப்பட்டதும் வாழ்த்துக் கூறியவர்கள் வசைபாட ஆரம்பித்து விட்டனர். பிறகுதான் புரிந்தது அவர்கள் அரசோச்சுபவர்களுக்கு வெண்சாமரம் வீசும் வேலைக்காரர்கள் என்று! காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளும் ஆற்றல் மிக்கோர் அவர்கள்.

அவசர காலச் சட்டம் அமுலில் இருந்தபோது “தி.மு.க.விற்கு இனி எதிர் காலம் இல்லை; அரசியல் கட்சியாக இருக்க முடியாது, இயங்க முடியாது; கட்சியைக் கலைத்து விடலாம்’ என்று கலைஞரிடம் வாதிட்டவர்கள் உண்டு “முடியாது” என்று மறுத்து வாதிட்ட கலைஞருக்குத் துணையாகக் குரல் கொடுத்தவன் நான் இருந்தாலும் என் ஜாதகக் கோளாறு ஒரு நண்பர் நான் இருப்பதை மறந்தோ அல்லது தனக்குச் சமமாக என்னைக் கருதாத காரணத்தாலோ என்னவோ என் மனதையும் புண்படுத்தி எழுதினார்...பரவாயில்லை... தாங்கிக் கொள்கிறேன்.

வளர்ந்திருந்த கழகத்தை இடித்துத் தள்ளினர். அதன் கடைக்காலை அறிஞர் அண்ணா அவர்கள் பலமாக அமைந்திருந்ததால் தரை மட்டமாக ஆவதினின்றும் தப்பியது. இன்று அதனை மீண்டும் உயர்த்திக் கட்டிட வேலைகள் நடைபெறுகின்றன. இந்தப் புனிதப் பணியில் கலைஞருக்குத் துணையாகக் கழகமும். கழகத்தின் தூணாக இல்லை. தூலமாக இல்லை இல்லை அடுக்கப்படும் லட்சக்கணக்கான செங்கல்களில் ஒன்றாக ஒவ்வொரு தொண்டனும் விளங்கும்போது கலைஞருடைய கரம் உயரும் என்பதில் ஏன் சந்தேகம்?

கலைஞருக்கு செட்டிநாட்டரசர் வழங்கும் வாழ்த்து

செட்டிநாட்டரசர் டாக்டர் இராஜாசர் எம்.ஏ. முத்தையா செட்டியார் அவர்கள் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:—

“டாக்டர் கலைஞர் திருவாளர் மு. கருணாநிதி அவர்களின் 55-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாச் சிறப்பு இதழினை “நம்நாடு” வார ஏடு வெளியிடுவது தெரிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

டாக்டர் கருணாநிதி அவர்கள் சிறந்த கலைஞர் என்ற முறையிலும், தமிழக முதல்வராக இருந்த போதும், இப்போது சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தும், தமிழகத்திற்கும், தமிழ் மொழிக்கும், தமிழ்க் கலைக்கும், ஆற்றிவருகின்ற பணிகள் பெரிதும் பாராட்டுதற்குரியன. கலைஞர் அவர்கள் மேலும் மேலும் அரும்பணிகள் புரிந்து பல்லாண்டு வாழப் பிரார்த்திக்கின்றேன்.

எம்கோ கலைஞன்

(தமிழ்மணி)

சங்கத் தமிழெடுத்து
சந்தச் சரம்தொடுத்து
தங்கக் கருத்தளிக்கும்
சிங்கத் தமிழ்மறவன்
வங்கக் கடல்வளைத்தோன்
கங்கைக் கரைவென்றோன்
சிங்கைதனில் மகிழ்ந்தோன்
எங்கோ அவர் தோன்றல்
நுங்கின் குளிர்பார்வை
எங்கள் தமிழர்பால்
பொங்கும் புதுவெள்ளம்
தங்கும் பகைகாணின்
அங்கை அருள் சுரக்கும்
சங்கை உளம்பழிக்கும்
எங்கள் தலைவனவன்
எங்கோ கலைஞனவன்!

ஆற்றல்மிகு அரசியல்வாதி!

முன்னாள் முதல்வர்

— எம். பக்தவத்சலம் —

கலைஞர் கருணாநிதிக்கு 54 வயது பூர்த்தியாகி 55 தொடங்குகிறது. இதையொட்டி 'நம் நாடு' சிறப்பிதழ் வெளியிடுவது மிகப் பொருத்தமே அவ்வாறே கலைஞர் வாழ்க்கைபற்றி நான் பாராட்டு வழங்குவதும் பொருத்தமேயாகும்.

ஜனநாயகத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட அரசியல் கட்சிகள் வேண்டுமாயினும் அந்த வகையில் பல கட்சிகள் அமைந்திருக்கிற நிலையில் கட்சிக்கு அப்பாற்பட்ட நிலையில் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்வதும் குணதிசயங்களைப்பற்றி விமர்சனம்செய்வதும் சிறந்த பண்பாடு ஆகும். அந்தப் பண்பாடு தமிழ்நாட்டில் மேலும் நல்ல முறையில் வளர வேண்டும் என்பதே என் அவா.

உண்ணுகின்ற உணவிலும் திருமணம் போன்ற வாழ்க்கைச் சிறப்புகளிலும் அரசியலை ஏன் புகுத்த வேண்டும்?

ஒரு கட்சியைப்பற்றி அரசியல் வாதிக்குத் தெளிவான கருத்தும் போக்கும் இருக்கத்தான் வேண்டும் ஆனாலும் கட்சியைச் சார்ந்தவர்களிடம் பகைமை பாராட்டுவது முறையல்ல.

தி. மு. க. மீண்டும் ஆட்சியில் வர நான் விரும்பமாட்டேன். ஆனால் இந்தக் கட்சியே அழிந்துவிட வேண்டுமென்று நினைப்பதோ கூறுவதோ பேசுவதோ நாகரிகமல்ல.

வேறு கட்சியைச் சார்ந்தவர்களிடம் காணப்படும் நல்ல அம்சங்களை நாம உணர்வது மட்டுமல்லாமல் பாராட்டுவதும் சீரான முறையாகும்.

அரசியல் தலைவர்கள் ஆட்சியை நடத்தும்போது நாம் கண்டதைவிட அவர்கள் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியில் விளங்கும்போதுதான் அவர்களுடைய ஆற்றல் நன்கு புலப்படுகிறது.

மந்திரி ஸ்தானங்களைவிட எதிர்க்கட்சி ஸ்தானமே கடினமானது என்று எப்போதும் கூறுவதுண்டு. நான் பதவி வகித்தபோது கண்ணசில் விரலைவிட்டு, ஆட்டும் எதிர்க்கட்சி மேதைகளைத்தான் நான் வரவேற்பேன்.

சுதந்திரப் போராட்டத்தின் போது தமிழ்நாட்டிலும் மத்திய சட்டமன்றத்திலும் காங்கிரஸ் எதிர்க்கட்சியாக விளங்கியது அப்போது அந்தத் தலைவர்கள் நன்கு பாராட்டப்பட்டார்கள்.

நாங்கள் 1946இல் தமிழ்நாட்டில் பதவி ஏற்றபோது முஸ்லீம் லீக் முகம்மது இஸ்மாயில் தலைமையில் வீற்றிருந்தது சிறந்த முறையில் இயங்கிய அந்த எதிர்க்கட்சியை நான் எப்போதும் பாராட்டியதுண்டு.

1952இல் தமிழ்நாட்டில் இராஜாஜி முதலமைச்சராயிருந்தபோது திரு. பி. இராமமூர்த்தி எதிர்க்கட்சித் தலைவராயிருந்தார் அவர் பேசி நான் விடையளிப்பதென்றால் ஆற்றல் மிகுந்த அவர் பேச்சுக்கு மறுப்புக் கூறுவதில் எனக்குத்தென்பு ஏற்பட்டதே தவிர. அச்சம் ஏற்பட்டதில்லை அதேமாதிரி கலைஞர் கருணாநிதி எதிர்க்கட்சியில் வீற்றிருந்தபோது கடினமான அவருடைய பேச்சை என்னைப் பொறுத்தமட்டில் எப்போதும் வரவேற்பேன். அதற்குச் சரியான விடையளிக்கும் வாய்ப்பு எனக்கு இருக்கிறது என்ற உணர்வே எனக்கு அந்தத் தென்பை உண்டாக்கும். எதிர்க்கட்சி சில உபகேள்விகளைக் கேட்டால் அதற்குச் சரியான பதிலளிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பேன். ஆனால், சட்டமன்றத்தில் அந்தக் கேள்விகள் கேட்கப்படாமல் ஏமாற்றம் ஏற்பட்டதுமுண்டு சில சமயங்களில் பின்னே திரும்பி என் கட்சி உறுப்பினர்களைக்கூட அந்தக் கேள்விகளைக் கேட்கச் சொல்லியதும் உண்டு.

இப்போது உள்ள தமிழ்நாடு சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக விளங்குகின்ற திரு. கருணாநிதி ஆற்றல் மிகுந்த தலைவராகவே விளங்குகிறார் ஆனால், சில சமயத்தில் கலைஞரிடம் நான் கொஞ்சம் அதிகப்படி காண்பேன் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமாகும் என்பது பழமொழி சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதே அவரிடம் காணப்படுகின்ற குறையைப் பற்றி அவரிடம் நான் குறிப்பிட்டதுண்டு, ஒருவன் அறிவாளியாகத்தான் இருக்க வேண்டும். ஆனால், தான் அறிவாளி என்ற நினைவு கூடாது இராஜாஜியே இந்தக் குறையினால் தவறியிருக்கிறார் எதிர்க்கட்சியிலிருந்து விமர்சனம் செய்யும்போதும் ஒரு அளவோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். ஆனால், குறைகளையோ தவறுகளையோ எடுத்துக் காட்டுவதில் எந்த அளவுக்கும் அதைக் குறைத்துக் கொள்ளவேண்டும் என்று கூறமாட்டேன்.

கலைஞர் கருணாநிதி தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் பாரதத்திலேயே ஒரு ஆற்றல் மிகுந்த அரசியல்வாதி என்று நான் கூறுவேன்.

தமிழ்நாட்டு அரசியல் வானில் முக்கியமாக அவர் ஒரு பிரகாசமான நட்சத்திரமாகவே விளங்குகிறார். அவருடைய கட்சி தேசிய கண்ணோட்டமில்லாத பிராந்தியக் கட்சியாக இருக்கிறபோதிலும் அவர் புகழ் பிராந்தியத்திற்கு அப்பாலேயும் எட்டியிருக்கிறது.

அவர் முதலமைச்சராக இருந்தபோது என்னுடைய கவனத்தை ஈர்த்தது அவருடைய கடுமையான உழைப்பு.

கலைஞர் கருணாநிதி அரசியல் துறையில் அடைந்திருக்கிற வெற்றிக்கு நான் நினைக்கிற முக்கியமான காரணம் அவர்தம் கட்சியை நல்ல முறையில் வளர்த்து வருவதுதான்.

அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் ஆனதும் என்னிடம் பேசிக் கொண்டிருந்தார். தாம் 100 ஸ்தானங்களுக்குமேல் எதிர்பார்க்கவில்லையென்றும் 1962 — 67 ஐந்து ஆண்டுகளில் சராசரி நாளொன்றுக்கு தமிழ்நாட்டின் 50 கூட்டங்களுக்குக் குறையாமல் நடத்தியதாகவும் அதுவே தம் வெற்றிக்குக் காரணமென்றும் கூறினர். அது முற்றிலும் சரியென்று நான் ஏற்றுக்கொண்டேன்.

இன்று கட்சி நிறுவனங்களை அமைப்பதில் தி. மு. க. முன்னணியில் நிற்கிறது;

கட்சித் தேர்தல்கள் முறையாகவும் மும்முரமாகவும் நடைபெறுவதாக நான் அறிகிறேன். நான் மற்ற கட்சிகளை குறைகூறுவதாக எடுத்துக் கொள்ளகூடாது.

காங்கிரசில் சுதந்திரப் போராட்டத்தின்போது ஸ்தாபன அமைப்புகள் கிராம மட்ட அளவில் நல்ல முறையில் இயங்கின.

கலைஞர் கருணாநிதிக்கு இப்போது தேர்தலில் தோல்வி ஏற்பட்டதோடு பல இன்னல்களும் காணப்படுகின்றன. ஆனால், கலைஞர் சிறிதும் சோர்வு அடையவில்லை, முயற்சிகளையும் கைவிடவில்லை. வாத ப்பிரதிவாத நோக்கத்துடன் அவர் வெளியிடுகின்ற சில கருத்துக்கள் ஒப்புக் கொள்ளக் கூடியவை அல்ல என்றாலும், அவர்தம் கட்சியைப் பலப்படுத்துவது போல் வேறு யாரும் செய்வதாகத் தெரியவில்லை. நான் கலைஞரைப் பாராட்டுவதற்கும் கலைஞர் திருமதி இந்திரா காந்தியை பாராட்டுவதற்கும் வித்தியாசம் உண்டு. நான் ஒரு வேறு கட்சியிலுள்ள அரசியல்வாதியிடம் காண்கின்ற நல்ல அம்சங்களை எடுத்துக் கூறுவது முறையே என்று தான் கலைஞருக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ★

முப்பெரும் தத்துவ டாலர் செயின்கள்



மேற்படி டாலர்கள் குழந்தைகள் முதல் ஆண்கள், பெண்கள் அனைவரும் கழுத்தில் அணிந்து கொள்ளலாம். முழு ரூபா அளவு உள்ள இந்த டாலர்கள் பஞ்சலோகத்தால் தயாரித்து 22 காரட் கோல்டு பிளேட்டிங் செய்யப்பட்டது. ஒவ்வொரு டாலருக்கும் மறுபுறம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அண்ணாவின் "மணிவாசகம்" பொறிக்கப்பட்டது. ஒரு டாலர் விலை ரூ. 15. டாலர் செயின் 24 இன்சி நீளம் உள்ள ஒரு செயின் விலை ரூ. 35. தபால் செலவு தனி. உங்களுக்கு எந்த டாலர் வேண்டுமென்பதை தெளிவாக எழுதி டாலர் மட்டும் வேண்டுமானால் ரூ. 3 அட்வான்சும். செயினுடன் டாலர் வேண்டுமானல் ரூ. 10 அட்வான்சும் அனுப்பினால் மீதி தொகைக்கு நீங்கள் விரும்பும் பொருளை V. P. P. மூலம் அனுப்பிவைக்கிறோம்.

தயாரிப்பாளர்: சக்தி. ஜி சம்பந்தன்
42, பள்ளிக்கூடத் தெரு, (சத்திரம் பிளாட்)
பட்டாபிராம்-சென்னை-600 072.

சென்னையில் கீழ்க்கண்ட விலாசத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
"போட்டோ வீனஸ்" 104, C. N. K. ரோட், சென்னை-600 005.
(ஸ்டார் டாக்கீஸ் சமீபம்)

தலைவர்களில் தலைவன் நீ!

கவியரசர்

பொன்னிவளவன்

மதுதேவை என்கின்றார் பலபேர் ; நான்நிம்
  மதிதேவை ! மதிதேவை ! என்பேன்; என்றும்
நிதிதேவை என்றலையா எனது நெஞ்சில்
  நிதிகருணா நிதியான நீதான் தேவை !
விதிதேவையா? இல்லை! நீவி திக்கும்
  விதிதேவை நம்கழகம் வளர்வ தற்கு !
பதிதேவை மனைவிக்கு ! அண்ணா விற்குப்
  பதில்தேவை முதல்தேவை நாட்டில் நீதான் !

அண்ணா ! அண்ணா ! என்றுன் மனத்து டிப்பை
  ஆக்கிவைத்துக் கொண்டவனே ! இந்த நாட்டில்
கண்ணா கண்ணாஎன்றே அழைப்பார் முன்னர்
  கைக்குழந்தைத் தாலாட்டுப் பாட்டில் தாயார் !
இந்நாளில் யாராரோ சிறுகு ழந்தை ;
  எதிர்காலம் உன்னைப்போல் அவர்கள் ஆவார் !
அந்நாள்போல் ஆராரோ வேண்டாம் ! பெண்கள்
  ' ஆரூரா ! ஆரூரா !' பாட லாமா ?

பல்லடுக்குக் கேட்கின்றார் எடுப்புச் சோற்றுப்
  பாத்திரத்தை வாங்குகையில் ! மின்னும் வண்ணக்
கல்லடுக்கைப் பார்க்கின்றார் மோதி ரத்தைக்
  கண்டுவிலே பேசுகையில் கடைக்கண் பெண்கள் !
முள்ளெடுக்க முடியாத சிலமீ னைப்போல்
  முன்பிருந்த பண்டிதர்தம் நடையை மாற்றிச்
சொல்லடுக்கித் தருகின்றாய் உன்எ ழுத்தில்
  சுவைகளைநீ அடுக்கடுக்காய்த் தருவாய் பேச்சில் !

சிலைகளிலே அண்ணாவின் சிலைபோல் பாட்டுச்
  செந்தமிழ்நூல் அனைத்திலுமே குறள்போல் காணும்
மலைகளிலே இமயம்போல் பூக்கும் வண்ண
  மலர்களிலே தாமரைபோல் கழகம் கண்ட
தலைவர்களில் தலைவன்நீ ! உன்னை வாழ்த்தத்
  தமிழென்பால் இருப்பதனால் நிமிர்ந்து நிற்பேன் !
கலைமான்நீ ! தமிழ்க்கல்வி மான்நான் ! உன்னைக்
  காலமெல்லாம் வாழ்கவென வாழ்த்து கின்றேன்.

டாக்டரை நேரில் சந்திக்க

முடியாதவர்களுக்கு வைத்திய ஆலோசனை இலவசம். உங்களுக்கு அல்லது குடும்பத்தில் ஏற்பட்டிருக்கும் வியாதிகளின் முழு விவரங்களை உலகப் புகழ் பெற்ற

பழனி டாக்டர்

எஸ். காளிமுத்து

R.M.P. (IND. V. V. C. A. I. H.)

பழனி — 624601

என்ற விலாசத்திற்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் ஆலோசனைகளும், சிகிச்சை விபரங்களும் உங்கள் விலாசத்திற்கு இலவசமாக அனுப்பப்படும்.

போன்: 316, 316 ஏ, 420 தந்தி: சித்தர்

புருஷன்

தென்னரசு

(3)

மனிதனுக்கு அவன் உயிர்தான் பெரியது. ஆனால் ஒரு பெண்ணுக்கு அவள் கணவனது அன்புதான் சிறந்தது. மனிதனைத் துயரத்திலிருந்து காப்பாற்ற எத்தனையோ உபாயங்கள் இருக்கின்றன. ஆனால் பெண்ணை அவளது துயரத்திலிருந்து காப்பாற்றக் கணவனது பாசம் ஒன்றினால்தான் முடியும் அதற்கு வேறு மருந்து இல்லை.

குருவம்மா அவளது வாழ்க்கையில் துன்பம், கண்ணீர், அவமானம், என்று எத்தனையோ கட்டங்களை சலிக்கச் சலிக்க அனுபவித்திருக்கிறாள் ஆனந்தம் என்ற கட்டத்தை அவள் தொட்டுத்தான் பார்த்திருக்கிறாள் ; சுவைத்ததில்லை. வாழ்க்கையில் சுவை என்பது நாக்கில் பட்டதும் இனிக்கக் கூடிய சர்க்கரை போன்றதா? பாடலின் பல்லவியை மட்டும் கேட்டுவிட்டு அந்தப் பாடலைத் தேனமிர்தம் என்று சொல்லி விட முடியுமா? பல்லவி, அனுபல்லவி சரணம், மீண்டும் பல்லவி—என்று பாட்டு முழுவதையும் கேட்டு அதில் மனம் இசைந்தால்தான் அந்த பாடலைச் சுவைத்ததாகச் சொல்வார்கள் இசைவாணர்கள். ஒரு பாடலுக்கே இவ்வளவு வரைமுறை என்றால் ஒரு பெண்ணின் வாழ்க்கையில் சுவை என்பது ஒரு கரண்டிச் சர்க்கரையாக, பத்துவரிப் பாடலாக மட்டும் இருக்க முடியுமா? வாழ்க்கை என்பது ஒரு சகாப்தம் ; அதற்குள் எத்தனையோ யுத்தங்கள், சமாதானங்கள் இலக்கியங்கள் தோன்றலாம் ; தோன்றியவை அழியலாம். ஒரு சகாப்தத்தில் சில ஆண்டுகள் என்பது ஒரு நூலின் முகவுரை அளவுதான். அவ்வளவுதான் குருவம்மா சுவைத்திருக்கிறாள்.

குருவம்மாவின் தந்தை செண்பகஞ்சேர்வை மாடிவீடு கட்டத் தொடங்கி பாதியிலேயே பணமில்லாமல் நிறுத்தியிருந்தான் அதில் சாந்து பூசாத மாடிப்படி இருந்தது. படியில் கணக்கற்ற பல்லிகளும், சிலந்திப் பூச்சிகளும் நிரந்தரமாகக் குடியிருந்தன அவைகளுக்கு மத்தியில் வாழ்ந்து வந்த குருவம்மா தன்னுடைய வாழ்க்கையும் முற்றுப்பெறாத பாதி வீட்டைப்போல்தான் முடிவுறும் என்று எதிர்பார்த்தாளா? அவள் முதல்முதலாக புருஷன் வீட்டுக்குப் போகும் சமயம், " குருவம்மா, எங்களுக்குப் பிறகு இந்த வீடு உனக்குத்தான் " என்று செண்பகம் சொன்னபோது அந்த வீடு அவளுக்கு ஒரு மாளிகைபோல் தோன்றி மறைந்தது,

சிலைமானில்தான் அவளுக்குக் கல்யாணம். சிலைமானுக்கும், மதுரைக்கும் வெகு தூரம் இல்லை. சொந்த அத்தை மகனுக்குத்தான் அவள் வாழ்க்கைப்பட்டாள்; மனைவியானாள்; துணைவியானாள் என்று சொல்லாமல் 'வாழ்க்கைப்பட்டாள் என்று அந்தக் காலம் முதல் சொல்லி வருவதற்குக் காரணமே பெண்கள் அவர்களது திருமணத்தன்றுதான் பட்டுக்கொள்ளத் தொடங்குகிறார்கள் என்பதற்காகத்தானோ? இது உண்மையோ பொய்யோ—ஆனால் குருவம்மா அவளது மண விழா அன்றுதான் சிக்கிக் கொள்ளத் தொடங்கினாள் என்பதுமட்டும் உண்மை

* * *

தின்னாயிரம், இளமைப் பருவத்திலிருந்தே குருவம்மாவுடன் கலந்து உறவாடியவன். சில விஷயங்கள் யாரும் சொல்லாமல், சொல்லிக் கொடுக்காமல் தெரிந்துவிடுவதுண்டல்லவா! அதில் மாமன் மகள் விஷயம் மிக முக்கியமானது. குருவம்மாவும் தின்னாயிரமும் பள்ளிப் பருவத்திலேயே சிலைமானை அணைத்து ஓடும் வைகைப்படுகையில் மணல்வீடு கட்டி விளையாடியவர்கள், 'இது சாப்பாட்டு அறை இது சமையலறை என்று அந்த மணல் வீட்டில் இடம் ஒதுக்குவாள் குருவம்மா. 'எல்லாம் சரிதான், படுக்கை அறை எங்கே?" என்று கிண்டலாகக் கேட்பான் தின்னாயிரம். குருவம்மா செல்லமாக அவன் குமட்டில் குத்துவாள்

குருவம்மா புஷ்பவதியான பிறகு சிலைமான் போவதை நிறுத்திவிட்டான் ஒரு பெண் மலர்ச்சிக்கு முன்னால் ஆடலாம், பாடலாம், ஓடிப் பிடித்து விளையாடலாம். ஆனால் அவள் மலர்ந்துவிட்டால் அவளது ஒவ்வொரு அசைவுக்கும் உலகம் பொருள் கண்டுவிடுகிறது.

தின்னாயிரம் படிப்பை நிறுத்திவிட்டான். ஊராரும் உறவினரும் தன்னை படிக்காத முட்டாள் என்று சொல்லிவிடாத அளவுக்குத் தான் அவன் படித்தான். யாராவது நண்பர்கள், சொந்தக்காரர்கள் இன்னும் கொஞ்சம் படித்தால் என்னவென்று கேட்டால் தின்னாயிரம் ஒரு பிரசங்கத்தையே நடத்தி விடுவான்:

"சொத்தும் சொந்த வீடும் பட்டணக் கரையோரத்தில் இருக்கும்போது நான் எதற்குப் படிக்கவேண்டும்? சம்பாதிப்பதற்குத்தானே படிப்பது ; எனக்கு எல்லாம் இருக்கிறதே! படிப்பதில் நேரத்தைக் கழிப்பதைவிட குறிப்பிட்ட தொழிலில் ஒருவன் நாட்டம் செலுத்தினால், படித்தவன் பட்டம் பெற்று வருவதற்குள் படிக்காதவன் தொழில் மேதையாகிவிடுவான். நாகுக் கொத்தனுக்கு இரண்டு பிள்ளைகள், மூத்தவன் படிக்காமல் தகப்பனைப்போல் கொத்து வேலைக்குப் போனான். இளையவன் எஞ்சினியர் வேலைக்குப் படித்தவன். இப்போது மூத்தவன்தானே அதிகம் சம்பாதிக்கிறான்! இளையவனுக்கு வெறும் சம்பளத்தோடு சரி!"

தின்னாயிரம் பேச்சை இன்னும் கொஞ்சம் கேட்டால் தங்கள் மனமும் எங்கே மாறிவிடுகிறதோ என்று எண்ணி நண்பர்களும் உறவினர்களும் எழுந்து போய்விடுவார்கள்.

செண்பகஞ்சேர்வைக்கு, மனைவியின் விருப்பத்தைத் தட்ட விருப்பமில்லை. 'நமக்கு இருப்பது ஒரே பொண்ணு! அந்தப் பொண்ணையும் கொண்டுபோய் அந்நியத்தில் கொடுக்க எனக்கு விருப்பமில்லை; அப்புறம் உங்கள் நாக்கம்! என்றாள் செண்பகத்தின் மனைவி.

"உன் விருப்பம் சரி, குருவம்மாவைக் கேட்டுப் பார்த்தியா? ' என்றான் செண்பகம்.

"நல்லா இருக்குது! இதென்ன தெருக்கூத்தா? அதுலேதான் மகாராஜாவும், மகாராணியும் மகளைக் கூப்பிட்டுக் கேப்பாங்க.... நாம பார்த்துச் செய்யறதை குருவம்மா மீறிடுவாளா? அவளுக்கு மருமகபுள்ளே மேலே கொள்ள ஆசை!" சக்கு அடித்துப் பேசினாள்.

குருவம்மாவுக்கும் தின்னாயிரத்துக்கும் அடுத்த மாதத்திலேயே சிலைமானில் திருமணம் நடந்தது. நலங்கு, நீராடல், பல்லாங்குழி பாட்டம், பட்டணப் பிரவேசம் — எதுவும் குறையில்லாமல்தான் திருமணம் நடந்தது. மறுநாள் தின்னாயிரத்துக்கு மதுரையில் பெண் வீட்டில் ஆடம்பரமாக விருந்து நடந்தது சின்ன வயது முதற்கொண்டே கண்டு வந்த கனவுகளும், கட்டி வந்த மனக்கோட்டைகளும் கண்ணெதிரே கோலாகலமாக நிறைவேறிவிட்டதை நினைத்து அந்த வாலிப நெஞ்சங்கள் சில்லிட்டுக் கிடந்தன.

"நிலவை இடித்துத் தள்ளிக்கொண்டு அந்த மேகக் கூட்டங்கள் எங்கே போகின்றன?"

"எல்லாம் நமது கல்யாணத்தைப் பார்த்துவிட்டு திரும்பிக் கொண்டிருக்கின்றன குருவம்மா!"

(5ம் பக்கம் பார்க்க)

புருஷன் ...!

(4ம் பக்கத் தொடர்ச்சி)

அன்று இரவு மகளும், மருமகனும் வீட்டின் மொட்டைத் தளத்திலிருந்து இப்படிப் பேசிக் கொண்டிருப்பதைக் காற்றுவாக்கில் கேட்ட செண்பகமும். சக்குவும் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள்.

ஃ ஃ ஃ

ஆசை அறுபது நாட்கள். மோகம் முப்பது நாட்கள் என்று எதற்காகப் பழைய காலத்தில் சொல்லி வைத்தார்கள்? அறுபது நாட்கள் ஆசையையும், முப்பது நாட்கள் மோகத்தையும் சிக்கனமாகக் கொஞ்சம்கொஞ்சமாக வாழ்க்கை முழுவதும் ஈவித்து அனுபவிக்க வேண்டுமென்பதற்காகத்தானே?

பாவம், குருவம்மாவை நினைத்தால் இனிக்கும் திருவும் என்று வர்ணித்து அவளது காலடியிலேயே கிடந்த திண்ணாயிரம் இப்போது அவளைக் கண்டால் எரிந்து விழுகிறான். இரண்டு இலையுதிர் காலங்கள், இரண்டு வசந்த காலங்கள், சகிக்க முடியாத வெய்யில் காய்ந்த ஒரு கோடைக்காலம், வசந்தத்தைப்போல் புழுக்கமாக இருந்த இரண்டு மாரிக் காலங்கள் — இப்படியாக இரண்டு ஆண்டுகாலம்தான் குருவம்மா வெப்பத்தில் சஞ்சரித்திருக்கிறாள். அதற்குள்ளாக அவள் அவனுக்கு கசந்த பாலாகிவிட்டாளே

ஃ ஃ ஃ

செண்பகஞ்சேர்வைக்குப்புதிது புதிதாகத் தகவல்கள் வந்து கொண்டிருந்தன. திண்ணாயிரம் வீட்டுக்குப் போவதில்லை; எப்போதாவது போனாலும் குருவம்மாவை அடித்து மிதித்துத் துவைப்பதற்காகத்தான் போகிறான்—என்று செண்பகம் கேள்விப்பட்டான். இவைகளையெல்லாம் பார்க்காமலே சக்கு கண்ணை மூடிவிட்டாள். தானும் தன் மனைவியைப் போல செத்துப் போயிருக்கக்கூடாதா என்று செண்பகஞ்சேர்வையும் அடிக்கடி நினைப்பது உண்டு. ஆனால் அடுத்த நிமிடமே அவன் அந்த பொறுப்பற்ற விரக்தியை மாற்றிக் கொண்டுவிடுவான். "நானும் இறந்துவிட்டால் என் மகளுக்கு யார் இருக்கிறார்கள்? வீட்டுக்குள் உதைக்கும மருமகன் அப்புறம் தெருவில் போட்டு மிதிப்பானே!" என்று செண்பகத்தின் மனம் நிமிர்ந்துவிடும்.

ஒருநாள் குலை நடுங்கும் சேதி ஒன்றைக் கேள்விப்பட்டான் செண்பகம். திண்ணாயிரம் வயிறு முட்டச் சாராயம் குடித்துவிட்டு வந்து குருவம்மாவைப் புரட்டிப் புரட்டி அடித்து முதுகிலும் தீக்கரண்டியால் சுட்டுவிட்டான் என்று சொந்தக்காரர் ஒருவர் பரக்கப் பரக்க ஓடிவந்து சொன்னார்.

திண்ணாபிரத்தைக் கடப்பாரையால் ஒரே அடியில் தீர்த்துவிட வேண்டும் என்றுதான் செண்பகம் நினைத்தான். எடுத்த எடுப்பில் தோன்றும் எண்ணங்கள் அனைத்தும் சரியாக இருப்பதில்லை. கோபமடைந்துள்ள மனம் அடுப்பில் இருக்கும் இரும்புச் சட்டியைப் போன்றது. அதில் போடும் முதல் பலகாரம் கருகிப் போய்விடும்; அல்லது அரைவேக்காடாகப் போய்விடும். திண்ணாபிரத்தைக் கொன்று விடலாம், ஆனால் அவனது உயிரோடு இன்னொரு ஜீவனுடைய வாழ்க்கையும் பின்னிப் பிணைந்து கிடக்கிறதே, அதற்கு என்ன செய்வது? பெண்பிறவி புதிர் நிறைந்தது. ஒரு மனிதனைக் கோபக்காரனாக்குவதும் பெண்தான். குணசீலனாக்குவதும் பெண்தான்.

செண்பகம் சிலைமானுக்குப் போய் குருவம்மாவை அழைத்து வந்துவிட்டான். அவளது முதுகில் தீப்புண் ரத்தினக்கோடு போல் விழுந்திருந்தது. அதைப் பார்க்கும் போதெல்லாம் செண்பகம் தனக்குள்ளே சீறிக்கொள்வான். ஆனால், குருவம்மா? அவள் மனம் புதையலைப்போல் நிறைந்து இறுகிப் போயிருந்தது. அவளிடமிருந்து யாரும் எதையும் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியாதுபோல் தோன்றியது அடக்கமாக இருப்பவர்களையும் எதையும் பெருந்தன்மையுடன் தாங்கிக் கொள்பவர்களையும் கோழைகள் என்று சொல்லிவிடுவதா? குருவம்மா என்ன நினைக்கிறாள்! என்னை அடிக்க அவருக்கு உரிமையிருக்கிறது என்று உள்ளூர நினைத்து நிம்மதி பெற்றுவிட்டாளா? அல்லது வாழ்க்கை கெட்டுவிட்டது: இனி எனது எதிர்காலம் உடைந்த மண்குடம் மாதிரிதான் என்று எண்ணி அணு அணுவாகப் பொருமிக் கொண்டிருக்கிறாளா?

"குருவம்மா!"

"என்னப்பா!"

"நான் ஏதாவது செய்ய வேண்டியிருக்கா? சொல்லம்மா! பித்துப் பிடிச்சமாதிரி இருக்கியே!" செண்பகத்தின் குரல் அழுகிப்போன வாழைப் பழத்தைப்போல் குழகுழத்திருந்தது.

"எல்லாம் போகப் போகச் சரியாகப் போயிடும்!"

குருவம்மாவின் பதில் செண்பகஞ்சேர்வையை திகைலடையவைத்தது. கணவன்மீது இன்னும் எவ்வளவு நம்பிக்கை அவளுக்கு!

"குருவம்மா, இன்னமும் நம்புறியா உம் புருஷனை?"

"ஏம்பா அவர் மனம் மாறுதுன்னு நீங்க எப்படி நம்புறீங்க?" பதில் கேள்வி போட்டாள் குருவம்மா.

"சொன்னாத்தான் நம்புவியாக்கும்! மாப்பிள்ளை திண்ணாயிரம் நாடகக்காரி மரகதவல்லியோட சுத்திக்கிட்டுத் திரிகிறாராம்! கொத்தனாருங்கெல்லாம் வாயாலே அழுகிறுங்க"

"அப்பா!"

"ஆமம்மா! பொய்யா சொல்றேன்!"

"அவருக்கே நல்லா இருந்தாச்சரி. அவர் திரும்பும் போது திரும்பட்டும். நாம ஏன் வெளிக் காட்டிக்கணும்?"

இந்த நேரத்தில் யாரோ சிலர் உள்ளே வரும் அரவம் கேட்டது.

"வாங்க, வாங்க! குருவம்மா! சிலைமானிலே இருந்து சொந்தக்காரங்கெல்லாம் வாராங்கம்மா! வெத்திலைப் பொட்டியை எடுத்துவைபி; பாயை எடுத்துப் போடு!"

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம் சேர்வை! ஒரு முக்கியமான விஷயமாக வந்திருக்கோம். பேத்தி சௌக்கியமா?" குருவம்மாவை எப்போதும் அவர்கள் அப்படித்தான் அழைப்பது வழக்கம் போலும்.

"ஏங்க சேர்வை, குருவம்மாவைத் தீத்துக்கணும்னு சொன்னீங்களாமே. அதான்....."

"நிறுத்துங்கய்யா! இதெல்லாம் என்ன சம்பிரதாயமான பேச்சா? குதிரை குப்புறக் கவுத்துப்புட்டு குழியையும் பறிச்சுச்சாம்! அது மாதிரியில்ல இருக்குது!" செண்பகஞ்சேர்வை சொல்லி முடித்துவிட்டு ஆந்தை அலறுவதுபோல் சிரித்தான். அவனைப்போல் பட்டு நொந்து போனவர்களுக்குத்தான் தெரியும்—அது சிரிப்பல்ல, தீயின் ஜுவாலை என்று!

குருவம்மா குறுக்கிட்டாள்: "இதெல்லாம் எங்கிட்டேயில்ல கேட்கணும். அப்பாவுக்கும் இதுக்கும் என்ன இருக்கு? எங்க வூட்டுக்காரரு என்ன வேணாலும் பேசட்டும், இருக்கட்டும்! நாத்தா, பெண் தெய்வம் ஊமையாகத்தான் இருக்கும். அது தாண்டவமாடத் தொடங்கிச்சுனா யாராலேயும் தடுக்க முடியாது" — குருவம்மா குமுறினாள்.

வந்தவர்கள் எழுந்து போனார்கள். குருவம்மா தேம்பித் தேம்பி அழுதாள். செண்பகம் அவளைத் தேற்றினான்.

"இப்படியெல்லாம் வரும்னு தெரிஞ்சிருந்தா இங்கே வந்திருக்கவேமாட்டேன். சிலைமானிலேயே உசிரை விட்டிருப்பேன்." குருவம்மா புலம்பினாள்.

"அங்கயர்க்கண்ணி! அகிலாண்டஈஸ்வரி! இந்த அக்ரமத்தைக் கண்டிக்க ஆளில்லையா?" செண்பகஞ்சேர்வை ஒரு பக்கம் வரம் கேட்டுக் கொண்டிருந்தான்.

திண்ணாயிரம் ஏன் குருவம்மாவை வெறுக்கவேண்டும்? அவள் அழகில்லாதவளா? அழகு என்பது எது? அதற்கு இலக்கணம் உண்டா? மனதுக்குப் பிடித்தமானதெல்லாம் அழகாய்த் தோன்றுவது தானே அழகின் மர்மம்! குருவம்மாவை கிளியோபாத்ரா என்றோ; மும்தாஜ் என்றோ; நூர்ஜகான் என்றோ கூற முடியாவிட்டாலும் அவள் பார்ப்பவர்களுக்கெல்லாம் அழகியாகத்தான் இருந்தாள் அவள் நடையில் பெண்யானையின் ஒய்யாரம் இல்லாவிட்டாலும் சீமைப்பசுவின் மதமதப்பு இருந்தது. அவளது குரலில் சங்கீதம் இல்லாவிட்டாலும் முகத்தில் சாந்தம் இருந்தது. அவளது கவர்ச்சியின் ரகசியம் எல்லாம் பரந்த நெற்றியிலும்

[15-ம பக்கம பார்க்க]



தமிழின வரலாற்றை உருவாக்கும் கலைஞர்

—தவத்திரு குன்றக்குடி அடிகளார்—

தமிழினம் காலத்தால் மூத்த இனம். கருத்தாலும் மூத்த இனம். பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே புகழ் பெற்று வாழ்ந்த இனம். புகழெனின் ஒரு துறைப் புகழன்று. பல துறையிலும் விழுமிய புகழ்பெற்று வாழ்ந்த இனம். இங்கனம் புகழ்பூத்துவாழ்ந்த தமிழகத்தில் நாட்டுத் தேவர் மூலம் அயல்வழக்கு நுழைந்தது.

தமிழினம், தவறான —பெருமை என்ற பெயரில் சாதிப் பிரிவுகளுக்கு ஆளாக்கப் பெற்றது. சாதிப் பிரிவினை அந்த அளவோடு நிற்காமல் காழ்ப்புக்கும் கசப்புக்கும் கால்கோள் செய்தது; பகை வளர்ந்தது. இன ஒருமைப்பாடு சீர்குலைந்தது. தமிழர், தம்முள் பொருதிக் கொண்டனர். அயலவர் அமைதியாக வாழ்ந்தனர். அனைத்தும் பெற்றுத் துய்த்தனர்; தமிழகத்தின் வரலாறு ஒளி இழந்தது.

இந்த இருண்ட வரலாறு தொடரவில்லை. இடை இடையே நல்லறிஞர்கள் இந்தச் சாதிப் பிரிவினையைக் கடுமையாக எதிர்த்துப் போராடியிருக்கிறார்கள். ஆயினும், வெற்றி முற்றாகக் கிடைக்கவில்லை. இருபதாம் நூற்றாண்டு, தமிழினத்து வரலாற்றின் திருப்புமுனை. இந்தத் திருப்புமையத்திற்குத் தொடக்கம் தந்தவர் தலைவர் பெரியார். அமரர் அண்ணா அந்த வரலாற்றைத் தொடர்ந்து தமது நாவீறு கொண்டு எழுதினார். வெற்றி கிடைத்தது; தமிழக அரசு அமைந்தது. தமிழினத்தைச் சார்ந்த அனைவரையும், தம்மில் மாறுபட்டாரையும்கூட அறிஞர் அண்ணா இதயத்தால் தழுவினார்.

இத்தகைய இனிய செயல் சென்றகாலத் தமிழின வரலாற்றில் இல்லை என்றே கூறலாம். தமிழினத்தின் வெற்றி யானாலும் களத்தில் நின்றாருக்கெல்லாம் பங்கிருந்தது. ஏன்? வெற்றி யாருடையது? என்பதிலேகூட ஐயப்பாடு உலாவியது. நமக்கில்லை; வேறு சிலருக்கு!

இந்த ஐயத்திற்கு விடைகாண அண்ணாவின் அருமைத்தம்பி கலைஞர் முன் நின்றார்; 1971தேர்தலையும் கொண்டு வந்தார். பதவிக் காலம் முடிவதற்கு ஓராண்டு இருக்கும்போதே துணிவுடன் சட்டமன்றம் கலைக்கப் பெற்றது. பொதுமக்களை நாடி நீதி, நியாயம் கேட்கப் பெற்றது. அதன் மூலம் தமிழினத்தின் தனியாற்றல் நிலை நிறுத்தக் கால்கோள் செய்யப் பெற்றது.

நடைபெற்ற அந்தத் தேர்தல் தமிழக அரசின் தேர்தல் மட்டுமல்ல; தமிழினம் தனித்து நிற்க முடியுமா? முடியாதா? என்ற வினாவிற்கு விடை காணும் தேர்தலாக அமைந்தது.

தேர்தல் காலம் சூடு பிடித்தது. நாட்டுத் தேவரெலாம் அணிமாறி நின்றனர். தமிழகத்தில் 'கலியுக நான்முகன்களாக விளங்கியவர்கள் எழுதிக் குவித்தனர். இந்திய நாடும், அயல் நாடுகளும் கூடத் தமிழகத்தின் கருத்தை உருவாக்கும் சக்தி ''இங்கேதான்'' இருக்கிறது என்று கருதிக்கொண்டிருந்தன. ஆனால் அந்தக் கற்பனையை—மாயையை மண் மூடிப் போகச் செய்து தமிழினத்தில் தனி வரலாற்றினை எழுதுவதில் வெற்றி கண்ட கலைஞர், தேர்தலில் மட்டும் வெற்றி பெறவில்லை; ''உலக அரங்கிலேயே தமிழகத்துக் கருத்தை உருவாக்கும் ஆற்றல் தமிழருக்கு இருக்கிறது. அது இன்று தமிழர் அல்லாதாரிடத்தில் இல்லை'' என்ற புதிய செய்தியை உலக அரங்கிற்கு கலைஞரின் வெற்றி அளித்தது. அதன் வழி, தமிழன் குரல் தனித் தமிழ்க் குரலாகக் கலப்பின்றி இனி ஒலிக்கும்! சென்ற காலத் தமிழினத்தின் செய்திகள் இனி விளக்கமுறும். இங்ஙனம், தமிழக வரலாற்றில் ஒரு நிலையான திருப்பத்தைச் செய்து தனித்தன்மையுடன் தமிழினத்தின் வரலாற்றை எழுதிக்கொண்டிருக்கும் கலைஞர் வாழ்க! அவர் தம் முயற்சிகள் வெற்றி பெறுக! ★

சாரப்பள்ளம் சாமுண்டி

"சாரப்பள்ளம் சாமுண்டி ஒரு கற்பனைக் கதைதான்; ஆனால், வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு வரையப்படும் ஒரு சித்திரம்!

கி. பி. 1005ஆம் ஆண்டு; முதலாம் இராசராசன், தஞ்சையில், 'இராசராசேச்சரம்' என்னும் பெரிய கோயில் ஒன்றை எழுப்பும் முயற்சியில் ஈடுபடுகிறான்; அந்தக் கோயில் வெறும் சமயத் திருப்பணி மட்டுமல்ல — அவன் பெற்ற வெற்றிகளின் நினைவுச் சின்னம்! அவன் உள்ளத்தில் சுடர்விட்டுக் கொண்டிருந்த கலையார்வத்தின் எடுத்துக் காட்டு!

கரிகால் பெருவளத்தான் காலத்தில்ஓங்கிஉயர்ந்திருந்தசோழப்பேரரசுவீழ்ந்து விட்டதென்று உலகம் முடிவு கட்டிய நேரத்தில், தஞ்சையில் விசயாலயச் சோழன், சோழ மண்டலத்தில் புலிக்கொடியைத் தூக்கிப் பிடித்து நின்றான். அந்தக்கொடிக்குத் தலைவணங்கப் பல நாடுகளைத் தன் செங்கோலின் கீழ்க்கொண்டுவந்த பெருமை, இரண்டாம் பராந்தகச் சோழனின் மகன் முதலாம் இராசராசனையே சாரும்!

கி. பி. 985 ஜூன் திங்கள் இருபத்தைந்தாம் நாள், இராசராசன், அரசுக் கட்டில் ஏறினான். முதிர்ந்த அரசியல் அனுபவங்களைப் பெற்று முடிசூட்டிக் கொண்ட காரணத்தால், இவன் ஆட்சியைப் 'பொற்காலம்' என்று வரலாறு வர்ணிக்கிறது!

இவன் உருவாக்கி நிலைநிறுத்திய சோழப் பேரரசு, இரண்டு நூற்றாண்டுகள் வரையில், பெருமையுடன் திகழ்ந்தது; பட்டத்திற்கு வந்து நான்கைந்து ஆண்டுகள் போர் பற்றிச் சப்தமே அவன் நாட்டில் எழவில்லை!

சப்தம் கேட்கவில்லையே தவிர, திட்டங்கள் தீவிரமாகத் தீட்டப்பட்டன!

சோழநாட்டைச் சுற்றியுள்ள சிற்றரசர்களையும், பிற வேந்தர்களையும் சோழப் பேரரசுக்கு உட்படுத்த வேண்டுமென்ற எண்ணங்கொண்டு செயலாற்றினான் இராசராசன்!

சுற்றியுள்ள மன்னர்களால் என்றைக்கும் சோழநாட்டுக்கு விபத்து ஏற்படக் கூடும் என யோசித்து அதை முன் கூட்டியே தவிர்க்கவேண்டி நாட்டின் படைபலத்தைப் பெருக்குவதிலும். அரணை உறுதிப்படுத்துவதிலும், நாட்டு மக்களுக்கு எல்லாக் காலத்திலும் வளமான வாழ்வு அமையவேண்டுமென்பதிலும் தன் ஆற்றல் முழுவதையும் செலவிட்டான்!

அவனது மகன் இராசேந்திரன், ஒரு வேங்கைப்புலி; திரும்பிய பக்கமெல்லாம் வெற்றிகளைக் குவிக்கக்கூடிய மாவீரன்!

இராசேந்திரனின் முதல் மனைவியின் பெயர் பஞ்சவன்மாதேவி; மனைவியிடம் கொண்டுள்ள அன்பின் காரணமாகத் தனக்குப் 'பஞ்சவன்மாராயன்' என்ற புனைபெயரைச் சூட்டிக்கொண்டான் போலும்; மாராயம் என்பது, படைத் தலைவர்க்கு அரசனால் செய்யப்படும் சிறப்பு!

இராசேந்திரன் முடி சூட்டிக்கொள்ளும் வரையில், சோழநாட்டின் படைத்தளபதியாக இருந்து - சோழப் பேரரசின் பரப்பளவை விரிவுபடுத்துவதில் கண்ணும் கருத்துமாய் இருந்தான்; தந்தையைப்போலவே அவனும் கலை ஆர்வம் கொண்டவன்; அந்தக் கலைச் செல்வத்தை அவனுக்கு வாரி வழங்கும் வள்ளலாக அமைந்தாள் மனைவி பஞ்சவன்மாதேவி!

தந்தை, மகன் இருவரது திறமையும் இருவரிடையே ஏற்பட்டு முகிழ்த்திருந்த அன்பும், சோழநாட்டை எஃகுக் கோட்டையாக மாற்றிடப்பயன்பட்டன:

கருணாநிதி

"மணிமுடி தலையில் இருக்கிறது—மந்திரிப் பிரதானியர் பக்கலில் இருக்கிறார்கள்; மாளிகை இருக்கிறது..மஞ்சம் இருக்கிறது; மன்னர் என்ற பெயர் இருக்கிறது; இதுவே போதும்...இகத்தில் இன்பம் பெற என எண்ணிக் கிடக்கும் மந்தமதி இராசராசனுக்கு இருந்திருக்குமேயானால், அவனது எல்லைகள் பறிப்போயிருக்கக் கூடும்; சோழநாடு சுருங்கிச் சீர்குலைந்து போயிருக்க வழி வகுத்தவனாகி இருப்பான்; ஆனால் அவனோ, எதிர் காலம் உணர்ந்த அறிஞர் பெருந்தகை; பகைவர்களின் உளப்பாங்கு புரிந்து கொண்ட இராஜ தந்திரி; ஆகவேதான் அரணை வலுவாக்கி படையைப் பெருக்கிட நாலைந்து ஆண்டுகள் செலவிட்டான்; அதன் பின்னர், எதிரிகளைக் கணக்கிட்டான்- யார் யாரை படை கொண்டு அழிக்கலாம்; யாருடன் நட்பு பாராட்டலாம்; யார் யாரை வளர விடாமல் சோழ நாட்டுக்கு அடங்கி நடக்கச் செய்யலாம்' என்ற தீர்க்கமான திட்டங்களையெல்லாம் சிந்தித்துச் செயல்பட முனைந்தான்; பிறகு புலிக் கொடிப் படைகள் புறப்பட்டன; பெரும படைத் தலைவன் பதவியை ஏற்றுக் கொண்ட பஞ்சவன் மாராயன் எனும் இராசேந்திரனின் வீரவாள் சுழன்றது; மின்னல்கள் ஆயிரம் கோடி யென வெளிப்பட்டன; அவை, இராசராசனின் வெற்றி ஒளியைப் பாய்ச்சின!

யானைப் படை—குதிரைப் படை—காலாட் படைகளுடன் கடற்படையும் கொண்டு மாற்றாரைச் சுற்றி வளைக்க மாமன்னன் இராசராசனின் போர் முழக்கம் இடியென முழங்கியது!

கி. பி. 989—இல் சோழர் படை, சேரநாட்டில் நுழைந்தது; சேரனுடன் இணைந்து நின்று, பாண்டியன் அமரபுசங்கன்' என்பானும் சோழரை எதிர்த்தான்; காந்தளூர்ச் சாலை எனப்பட்ட துறைமுகப் பட்டினத்தில் நடைபெற்ற போரில் 'சேரரின் மரக் கலங்களையெல்லாம் சோழர் படை அழித்து வெற்றி கண்டது.'

சேரநாட்டை வென்ற இராசராசன், அங்கு தன்னுடைய பிறந்த நாளான ஐப்பசித் திங்கள் 'சதய நாளைக் கொண்டாடுமாறு செய்வித்தான்!

அங்கிருந்து, பாண்டியன் அமர புசங்கனை விரட்டிக் கொண்டு சோழப் படை புறப்பட்டது; 'விழிஞம் என்ற துறைமுகம் இராசேந்திரனால் கைப்பற்றப்பட்டது!

இந்த இரண்டு நாடுகளிலும் நடைபெற்ற போர், ஏறத்தாழ நான்கு ஆண்டுகள் நடைபெற்றிருக்கின்றன!

பின்னர் குடமலை நாட்டு மன்னன் மீது தஞ்சை பழி தீர்த்துக் கொள்ளக் கிளம்பியது; அந்த நாட்டிற்குத் தஞ்சையிலிருந்து அனுப்பப்பட்ட தூதன் கொல்லப்பட்ட செய்தி கேள்வியுற்ற சோழ வேந்தன் இராசராசன், படை கொண்டு புறப்பட்டான்; பெரிய காடுகள் பதினெட்டுக்கு மேற்பட்டவைகளைத் தாண்டி, குடமலை நாட்டின் தலைநகரான வலிவு மிக்க உதகைப் பட்டினத்தை அழித்து வெற்றி மாலை சூடினான்; குடமலை நாட்டு அரசன் மீனிசா, போர்க்களத்தில் பெரும் வீரம் காட்டிப் போரிட்டான் என்பதை இராசேந்திரன் மூலம் அறிந்து - அந்த மீனிசாவுக்கு 'மாளவி' என்ற நகரத்தை நன்கொடையாக வழங்கினான்!

கீழைச் சாளுக்கிய நாட்டில், 'அரசுக் கட்டில் யாருக்குச் சொந்தம்; என்பதிலே பெருங் குழப்பம் மூண்டிருக்கிறது; சக்திவர்மன் என்பவனும் அவன் மரபினரும் நாட்டை விட்டுத் அரத்தப் பட்டனர்; இராசராசன் சக்தி வர்மனுக்கு ஆதரவு காட்டி—அவனது எதிரிகளை முறியடித்து ..கீழைச் சாளுக்கிய நாட்டுக்குச் சக்திவர்மனை அரசனாக்கினான்!

சக்திவர்மனின் தம்பி விமலாதித்தனுக்கு இராசராசனின் மகள் குந்தவையை மணம் செய்து கொடுத்து.. கீழைச் சாளுக்கிய நாட்டின் நட்பைப் பலப்படுத்திக் கொண்டது மசாளுடு!

பின்னர், கலிங்கத்தில் நடந்த கடும் போரில் இராசராசன் வாகை சூடினான்; கங்கை பாடியின் மீது போர் தொடுத்து—அதன் தலைநகரான தாலக் காட்டைப் பிடித்து—அதற்கு 'இராசராசபுரம்' எனப் பெயர் மாற்றினான்!

அதே வேகத்தில், நுளப்பப்பாடி வீழ்ச்சியுற்றது; தடிகைபாடியும் இராசராசனுக்குத் தலை வணங்கி நின்றது!

அடுத்து, கொல்லம் படையெடுப்பு —கொடுங்கோளூர் மீது போர்—இருநாடுகளையும் அடக்கி, கீர்த்திப் பராக்கிரமச் சோழன் என்ற பட்டத்தைப் பெற்றான் இராசராசன்!

மேலைக் கடற்கரையோரத்து மன்னர்கள் அனைவரையும் அடக்க முனைந்து இராசேந்திரன், படைகொண்டு சென்று, துளுவர்—கொங்கணர் ஆகியோரைச் சிறை பிடித்தும்,

சேரரையும்—தெலுங்கரையும் முறியடித்தும், சோழ பூமிக்கு ஒப்பற்ற வெற்றியைத் தேடிக் கொடுத்தான்!

ஈழப் படையெடுப்பில் இராசஇராசன் பெற்ற வெற்றியின் அறிகுறிபாகவட இலங்கைக்கு; 'மும்முடிச் சோழ மண்டலம்' எனப் பெயர் சூட்டினான்; இந்தப் போரில். அனுராதபுரம் ஆக்கம் அழிந்தது! 'போலனருவா' என்ற இடத்தைச் சோழர் தலைநகராக இலங்கையில் அமைத்துக் கொண்டான் இராசராசன்!

"இராமன் இலங்கை செல்வதற்குக் குரங்குகளைக் கொண்டு பாலம் கட்டினான்; ஆனால் இராசராசன், பாலம் கட்டாமல் ... படைகளைக் கப்பல்கள்மூலமாகக் கொண்டு சென்று இலங்கை வேந்தனைக் கொன்றான்; இதனால் இவன், இராமனைவிடச் சிறந்தவன்' என்று திருவாலங்காட்டுப் பட்டயம் பகர்கின்றது!

மேலைச் சாளுக்கியப் பகுதிகளான இரட்டப் பாடியில் சத்தியாங்கரயன் என்றபலம் வாய்ந்த மன்னனை இராசஇராசன் எதிர்த்துக் கடுமையான போரிட்டான், அதில் சத்தியாங்கரயன் புறமுதுகிட்டுப் பதுங்கி விட்டான் என்றாலும், நாட்டை இழந்துவிடவில்லை!

இராசராசன் இரட்டப்பாடி போர் மூலம் மிகுந்த பொன்னும் பொருளும் அடையப் பெற்றான். அந்த அளவற்ற செல்வத்தைக் கொண்டு வந்துதான் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டத் தொடங்கினான்; முந்நீர்ப் பழந் தீவு பன்னீராயிரமும் கைப்பற்றி. 'மும்முடிச் சோழன்' என்ற புகழ்மாலையும் பெற்ற இராசராசனது வெற்றித் தூண் போல நிற்பதுதான்—தஞ்சை இராசராசேச்சரம் எனும் கலைக் கோயில்!

இராசராசனின் ஈடும் எடுப்பும் அற்ற வீரத் தோற்றம் போலவே அந்தக் கோயிலும் நிமிர்ந்து நின்று பழந்தமிழ்ப் பெரு வீரனின் போர்ப்பரணியையும் — கலை முழக்கத்தையும் அரசியல் பேரொளியையும் அவனிக்கு அறிவித்துக்கொண்டிருக்கிறது!

அந்தக் கோயிலை எழுப்புவதற்கு இராசராசன் தீட்டிய திட்டங்கள் எத்தனை—எத்தனை! அவன் எண்ணங்கள் அத்தனையும் நிறைவேறினவா? அந்தக் கலைக் கோயிலில் அவன் காண வேண்டுமென்று விரும்பிய அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டு விட்டதா? இல்லை—அவன் எண்ணம் முழுதும் ஈடேறவில்லை!

ஏன் ஈடேறவில்லை? அந்தக் கேள்விக்குப் பதில்தான் இந்தக் கதை!

ஃ ஃ ஃ

கோயில் திருப்பணியைப் பொறுப்பேற்று நடத்திக் கொண்டிருப்பவன் கண்டராதித்தன் என்னும் பேரதிகாரி, இராசராசனின் சிற்றப்பாவான மதுராந்தகச் சோழனின் மகன்தான் கண்டராதித்தன்.

கண்டராதித்தனை ஒரு நாள் அழைத்து, அரசனும் இராசேந்திரனும்-இராசராசனின் அக்காள் குந்தவையாரும், 'கோயில் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும்' என்பதுபற்றித் தீவிரமாக யோசிக்கத் தொடங்கினார்கள்.

"கோயிலுக்கு, 'இராசராசேச்சரம்,' என்னும் பெயரே வழங்கப்பட வேண்டு' என்று குந்தவையார் கருத்து அறிவித்தார்.

"கோயிலுக்கு ஏழுவாயில்கள் அமைக்கப்பட வேண்டும்; அங்கு பதினான்கு வாயிற் காவலர் சிலைகள் அமைக்க வேண்டும்' என்றான் இராசேந்திரன்.

"இராசேந்திரனுக்கு எப்போதும் பாதுகாப்பைப் பற்றித்தான் அக்கறை, இராசேந்திரா—சிலைகள் கோயிலைப் பாதுகாக்குமா?' என்று சிரித்துக் கொண்டே கேட்டான் மன்னன்!

'சிலைகளை நாம் பாதுகாக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும்; இருந்தாலும் 'அழகுக்காக இருக்கட்டும், என்று சொன்னேன் என்று பதில் கூறினான் இளவரசன்; அவன் ஆசை ஒப்புக் கொள்ளப்பட்டது.

'தோரண வாயில், திருமாளிகை வாயில், திரு அணுக்கன் வாயில் என்ற மூன்று வாயில்களையும் பழைய முறைப்படியே அமைத்துவிடலாம் அல்லவா?' என்று கண்டராதித்தன் கேட்டான்,

மன்னன் "சரி' என்று தலையசைத்தான்.

அதற்குள் குந்தவையார் குறுக்கிட்டு, 'இல்லை இல்லை; அந்த வாயில் பெயர்களில் மாற்றம் வேண்டும் இராசராசன் சேரர்களுக்கு எமனைப் போன்றவன் என்பதற்கு அடையாளமாக முதற் கோபுர வாயிலைக் "கோளாந்தகன் 'வாயில் என்றும், இரண்டாவது கோபுர வாயிலை 'இராசராசன் திருவாசல் என்றும் அழைக்க வேண்டும்' என்று கூறினாள்.

[10-ம் பக்கம் பார்க்க]

சாரப்பள்ளம் சாமுண்டி...

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

அக்காளின் பேச்சை மறுத்துப் பேசிப் பழக்கமில்லாத இராசராசனும் வாளாவிருந்துவிட்டான்.

"கர்ப்பக் கிரகத்துக்கு மேலே உள்ள விமானத்தை நல்ல உயரத்திலும், பதின்மூன்று கோபுர மாடிகள் கொண்டதாகவும் அமைக்கத் திட்டமிட்டிருக்கிறேன்" என்று கண்டராதித்தன் கூறியதை அனைவரும் மகிழ்ச்சியுடன்ஏற்றுக்கொண்டார்கள்.

"அந்த விமானக் கோபுரத்தின் உச்சியில் வைக்கப்படும் ஸ்தூபிக் குடம், மூவாயிரம் பலம் எடையுள்ள செப்புக் குடமாக இருக்கவேண்டும்; அதன் மேல் சுமார் மூவாயிரம்கழஞ்சுநிறையுள்ள பொன் தகடு போர்த்த வேண்டும்"—இராசராசன் இந்த ஆசையை வெளியிட்ட போது குந்தவையார் புன்னகையை நெளியவிட்டுத் தன் தம்பியை அருள் ஒழுகும் கண்களால் ஆசைதீரப் பார்த்துப் பரவசமுற்ருள்.

"கோயிலில் சோழப் பேரரசின் சிறப்புக் குறிப்புக்கள் வெற்றிச் செய்திகள்தாங்கிய கல்வெட்டுக்கள்செதுக்கப்பட ஏற்பாடு செய்ய வேண்டும்"—என்று குந்தவையார் கூறினுர்.

"ஒரே கல்லில் ஒரு பெரிய நந்தியை உருவாக்கத் திட்டமிட்டிருக்கிறேன்" என்ருன் கண்டராதித்தன்.

"சிற்பிகளிடம் கூறி. கோயில் விமானத்தின் நிழல் தரையில் விழாதவாறு அற்புதமாக அமைக்கச் சொல்லவேண்டும்" என்று உற்சாகத்துடன் கருத்தறிவித்தான் இராசேந்திரன்.

"சிற்பிகள் என்றதும் நினைவு வந்தது; கண்டராதித்தா—எனக்கு நெடுநாளைய ஆசை; அதை அந்தக் கோயிலில் நிறைவேற்றி ஆகவேண்டும்" என்று பரபரப்புடன் கூறத்தொடங்கினுன் மன்னன்; அனைவரும் அவனையே பார்த்துக்கொண்டிருந்தனர்.

"ஆண்டவன் ஆடியதாக உள்ள திருத்தாண்டவம் இருக்கிறதே..." என்று அவன் முடிப்பதற்குள், 'அதென்னப்பா — அதை ஆண்டவன் தானு ஆட முடியும் — எத்தனையோ ஆரணங்குகள் ஆடுகிருர்கள்' என்று குறுக்கிட்டுக் கூறினுன் இராசேந்திரன்!

"இராசேந்திரா — உன் குறும்பு மட்டும் போகாது; நான் கலைத்துவத்தோடு அந்தத் தாண்டவத்தைப் பார்க்கிறேன்; அது ஓர் உன்னதக்கலை, இந்நேரம் உன் மனைவி பஞ்சவன்மாதேவி இருந்தால், என் பக்கம் சேர்ந்து கொண்டு உன்னைத் தாக்கி இருப்பாள்" என்று செல்லக் கோபம் காட்டினுன மன்னன்.

இப்போதுதான் என்ன—அவள் மும்முடிச் சோழபுரத்திற்குத்தான் போயிருக்கிருள்; போய் அழைத்து வரட்டுமா?' இது இராசேந்திரனின் கேள்வி.

அதற்குள், குந்தவையார், 'இல்லை. இல்லை; அவள் நாளைக்கு வந்து விடுவாள்; அதுவரை உங்கள் வாதத்தை ஒத்திவையுங்கள்!' என்ருர் சிரித்துக்கொண்டே;

"அத்தை எனக்குக் கலை ஆர்வம் இல்லை என்கிருரே அப்பா; நீங்கள் நம்புகிறீர்களா?' இராசேந்திரன் குந்தவையாரிடம் அன்பொழுகக் கேட்டான்.

"சே, சே...யார் சொன்னது? உன் மனைவி பஞ்சவன் மாதேவி ஆடுவதும், நீ பாடுவதும் எத்தனையோ முறை என் கவனத்திற்குக்கொண்டு வரப்பட்டிருக்கிறது!'

இராசேந்திரன் வெட்கத்தால் தலைகுனிந்து கொண்டான் — குந்தவையாரின் கேலிகண்டு!

"சரி, சரி; நீங்கள் இடையே குறுக்கிட்டு நான் சொல்ல வந்ததை மறந்துவிடப்போகிறேன்; கண்டராதித்தா—இறைவனின் ஏழு வகை ஆடல்களில் எனக்கு அதிக ஈடுபாடு உண்டு என்பதுதான் எல்லாருக்கும் தெரியுமே; நாம் கட்ட இருக்கும் கோயில் மேல் தளத்தில் உட்பாகத்து அடிவரிசையில் இறைவனது தாண்டவங்களைச்சிற்பங்களாகச் செதுக்க ஏற்பாடு செய்யவேண்டும்; நூற்றெட்டு நடன நிலைகளை நூற்றெட்டுச் சிற்பங்களாக அமைத்திடவேண்டும்; ஒவ்வொரு சிற்பத்திலும் கலையின் உயிர்ப்பும் — துடிப்பும் மிளிர்ந்திடவேண்டும்;அந்தச் சிற்பங்களை உருவாக்குவதற்கு எவ்வளவு பொருள் செலவானுலும் பரவாயில்லை; திறமைமிக்க சிற்பி ஒருவனை இப்போதே தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும்; இந்த என் ஆசையை நிறைவு செய்ய வேண்டியது நின் தலையாய பொறுப்பாகும்' என்று இராசராசன் மிக்க உணர்ச்சியுடன் கூறினுன்.

நூற்றெட்டுக் கலைச் சிற்பங்களை அமைப்பதிலே மன்னன் காட்டுகின்ற அளப்பரிய அக்கறை கண்டு குந்தவையாரும், இராசேந்திரனும் ஒருவரை ஒருவர் வியப்புடன் பார்த்துக்கொண்டனர்.

கோயில் எழுப்புவதற்கான மேலும் பல திட்டவட்டமான யோசனைகளை வெளியிட்ட பிறகு, ஆக்கப் பணியில் இறங்குவதாக உறுதி கூறிக் கண்டராதித்தன் விடைபெற்றுக் கொண்டான்.

அதன் பின் அரசன், சேனுதிபதி கிருஷ்ணன் இராமனுன மும்முடிச் சோழப் பிரம்மராயனை அழைத்து, கோயிலுக்கான திருச்சுற்றுமாளிகை எழுப்பும் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்தான்

கண்டராதித்தனும்-பிரம்மராயனும், இராசராசேச்சரத்தை நாலைந்து ஆண்டுகளுக்குள் உருவாக்கிவிட வேண்டுமென்று — ஆவல் துள்ள—காரியத்தில் இறங்கினர்; நாடெங்கணுமிருந்து திறமைமிக்க சிற்பிகள் வரவழைக்கப்பட்டார்கள்; கற்கள் மலைமலையாகக் குவிக்கப்பட்டன; கோயில் காரியங்கள் குறைவின்றி நடைபெறுவதற்காக முப்பத்தைந்து ஊர்களை, 'தேவதானச் சிற்றூர்கள்' என்ற பெயரால் கோயிலுக்குக் கல்வெட்டு மூலம் அரசன் அளித்தான்,



கோயிற்பணிகள் குறைவற நடைபெற நானூறு தேவ மாதர்கள் கோயிலைச் சுற்றி வடக்கிலும் தெற்கிலுமாகக் குடியேற்றப்பட்டனர்; அந்த மாதர்களில், ஆடல் பாடல்களிலும் வல்லவர்கள் இருந்தார்கள்.

கோயில் சேவைக்கென கெட்டி மத்தளக்காரர்—வீணை வாசிப்பவர்—மொரவியம் வங்கியம், பாடவியம் உடுக்கை, முத்திரைச் சங்கம் முழங்குவோர்—உவச்சுப்பறை, சகடை, கரடிகை என்னும் பறைக் கருவிகள் வாசிப்போர் அனைவரும் தருவிக்கப்பட்டனர்.

அவர்களுக்குத் தனித் தனியே ஒவ்வொரு வேலி நிலம் நிபந்தம் அளிக்கப்பட்டது

கோயில் பண்டாரிகள், கணக்கர், திருவிளக்கிடுவார். மாலைகட்டி, மெய்க்காவலர் தச்சர் கன்னுர் — எனப்படும் துறையினரும் அமர்த்தப்பட்டனர்.

கோயில் வேலை முழுவதும் முடிவதற்குள்ளாகவேகோயிலுக்குத் தேவையான பொருள்களையும் சேகரித்துச் சிறப்புச் செய்வித்தான் அரசன்.

ஃ ஃ ஃ

தஞ்சை மாதாவின் மடியில் காலூன்றி எழும் சோழப் பேரரசின் வெற்றிக் கலைச் சின்னத்தைக் காண்பதற்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் நாள்தோறும் ஏராளமானவர்கள் தஞ்சையில் கூடினுர்கள்; 'தினந்தோறும் திருவிழா' எனத் தக்க வகையில் விளங்கிற்று சோழனின் தலைநகரம்!

அந்த மகத்தான காட்சியைக் காண வருபவர்கள். கடல் அலைபோல் கூட்டம் கூட்டமாக வந்து திரும்பிக் கொண்டிருந்தார்கள்

ஒவ்வொரு நாளும் புதிய புதிய ஊர்க்காரர்கள். தஞ்சையைச் சூழ்ந்து கொண்டு கோயிலின் வளர்ச்சியைக் கவனித்துச் சென்றனர்.

அந்த நரை மூதாட்டி மட்டும் நாள் தவருமல் — அந்திசாயும் நேரத்தில் — ஆலயம் கட்டப்படும் இடத்திற்குச் சிறிது தொலைவில் வந்து நின்று இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டேயிருந்தாள், அவளைச் சுற்றிச் சில ஆடுகள் நிற்கும்; பின்னர் பொழுது நன்ருகப் போனதும் ஆடுகளுடன் திரும்பிப் போய்விடுவாள்

நரைவிழுந்த கூந்தல் எனினும் அதனை வாரி ஒழுங்காக முடித்திருந்தாள்; வயது எழுபதை எட்டிப் பிடித்திருக்கும்; ஆனுல் அவள் நிற்பதற்குக் கம்பைப் பிடித்துக் கொள்ளவில்லை; 'நன்ருக உழைத்த உடம்பு' என்பது பார்த்த உடனே தெரிந்தது!

கொஞ்சம் கொஞ்சமாக விண்ணேக்கி உயர்கிற இராசராசேச்சரத்தைப் பார்க்கும்போது அவளது சுருங்கிய முகத்தில் ஒருவித மலர்ச்சி ஏற்படும்!

தொலைவிலே நின்றுகூட—அவளால் சிற்பிகளும் — ஏனைய பணியாளர்களும் நடத்துகின்ற வேலைகளைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது'

தினந்தோறும் அந்தக் கிழவி வருவதையும்—மிகுந்த உற்சாகத்துடன் திருப்பணியைப் பார்வையிடுவதையும் கண்ட சிற்பிகள் சிலர், ஒரு நாள் அவளை நெருங்கிப் பேச்சுக் கொடுக்கத் தொடங்கினர்.

ஆவ்ள் ஆடு வளர்ப்பதைத் தொழிலாகக் கொண்டவள்; பெயர் — அழகி; தஞ்சைக்கு அருகே நாலு கல் தொலைவில் உள்ள குக்கிராமத்தில் வாழ்கிருள்.

இந்த விவரங்களைச் சிற்பிகள் கேட்டறிந்தனர்.

'உனக்கேன் பாட்டி — இந்த வயதில் இவ்வளவு ஆர்வம்?' ஓர் இளம் சிற்பி சற்றுக்குத்தலாகக் கேட்டு வைத்தான்

"இராசராசச் சக்ரவர்த்தி செய்கின்ற இந்தக் காரியம், தலைமுறை தலைமுறைக்கும் தஞ்சையின் பெயரை உச்சரித்துக் கொண்டிருக்கும்; எனக்கிருக்கும் கவலையெல்லாம் இந்தக் காரியத்திற்கு என்பங்கை எப்படிச் செலுத்துவதுஎன்பதுதான்'— என்று பெருமூச்சுவிட்டுக்கொண்டே பதில் கூறியது அந்தப் பழுத்த பழம்'

"ஆயிரம் — கோடி என்று பொன்னையும் பொருளையும் அள்ளிக் கொட்டி நடத்தப்படுகின்ற இந்த மகாப் பெரிய திருப்பணியில், ஆடு வளர்க்கும் உன்னுல் என்ன பாட்டி உதவி செய்யமுடியும்?' என்று ஏளனமாகக் கேட்டான், இன்னெருசிற்பி

கிழவி அழகிக்கு அந்தக் கேள்வி கோபத்தைத்தூண்டிவிட்டது; அவள் அதனைச் சமாளித்துக்கொண்டு அந்தச் சிற்பியை நிமிர்ந்து பார்த்தாள்; அப்பப்பா — அந்த முதிர்ந்த விழிகளில்கூட எவ்வளவு கூர்மை!

அந்தச் சிற்பி தலைகுனிந்து கொண்டே வேறுபக்கம் நடையைக் கட்டினுன்!

அவள் உள்ளத்திலே பல நாட்களாக அந்தப்போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது; வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அந்த நற்பணிக்குத் தன்னுலான பங்கினையும் செலுத்தவேண்டும் என்பது அவளது தணியாத ஆசை.

இந்த வயதில் ஆடுமேய்ப்பதைத் தவிர அவளால் வேறு கடினமான வேலை என்ன செய்யமுடியும்? சுற்றுச் சுவர் எழுப்புகிறவர்களுக்குக் கல்தூக்கித்தர முடியுமா? சேறு குழைக்கத் தண்ணீர் கொண்டு வந்து குடம் குடமாகக் கொட்டக் கூடிய அளவுக்கு அவள் உடலில் வலு இருக்கிறதா? ஆனுலும் 'சோழப் பேரரசின் செங்கதிரோன்' எனப்படும் இராசராசனின் வீரத்தையும் வெற்றிகளையும்—விவேகச் செயல்களையும்—முகில்மாடத்தைத் தொட்டு நின்று முழங்கப் போகிற இராசராசேச்சுரத்தின் எழிலுக்கும் — ஏற்றத்திற்கும் தன்னுலான சிறு உதவியை யாவது செய்தே தீரவேண்டும் என்று அவள் முடிவு கட்டிக்கொண்டாள்; உதவி எத்தகையது என்பதைத் தான் அவளால் திடீரென்று தீர்மானிக்க முடியவில்லை

[தொடரும்]

வாடாத மலரின் வடியாத புன்னகை!

'கலைஞருக்கு ஒய்வு தேவை' என்கிறார் நாஞ்சிலார், நாமும் இதை மறுப்பதற்கில்லை.

நாஞ்சிலாரைப் போன்ற பொழுது போக்கு அரசியல்வாதிகளுக்கு ஒய்வைப் பற்றிக் கவலையில்லை; அரசியலே அவரைப் போன்றவர்களுக்கு ஓர் ஒய்வான பொழுது போக்கு அல்லது விளையாட்டு' ஆனால் பள்ளிப் பருவம் முதல், தான் பிறந்த பொன்னாட்டை— தன்னறிவை ஊட்டி வளர்த்த அன்னைத் தமிழை—தமிழ் மண்ணில் தழைத்த ஓர் உயர்ந்த இனப் பண்பாட்டை—போற்றுவதில், பேணிக் காப்பதில், வளர்ப்பதில் தனது நேரம் நினைப்பு உழைப்பு அனைத்தையும் செலவிட்டு வரும் திருக்குவளை மலருக்குக் கட்டாயம் ஒய்வு தேவைதான்!

எனினும் இந்த நாடு அவருக்கு தேவைப்படும் அந்த ஒய்வைத்தர மறுக்கிறது! அவர் மீதுள்ள அன்பால், பற்றால், பாசத்தால், அவரை விட்டால் தமிழ் மண்ணுக்கு உய்வில்லை என்ற விழிப்புணர்வால்—அவர் உழைப்பை எந்நேரமும் நாடிக்கொண்டே இருக்கிறது இந்த நாடு!

அவர் இந்த நாட்டின் நம்பிக்கை நட்சத்திரம்!

அவர் இந்த நாட்டின் விடிவெள்ளி!

அவர் இந்த நாட்டு ஏழையர் தம் வீட்டு விளக்கு'

அவரே ஒருமுறை சொன்னது போல், பங்களா வாசிகளின் குரோட்டன்ஸ் செடியல்ல அவர்; வறியோர்க்குதவும் குப்பை மணிக் கீரை!

இந்தத் திருக்குவளை மலர் ஒய்வெடுத்தால் இந்த நாடு வாடி விடும்!

நட்டம் மலருக்கல்ல!

நாட்டுக்குத்தான் !!

இதை உணரமாட்டாதவராள்வோர் அல்லது உணர்ந்தும் ஒத்துக் கொள்ள மாட்டாத மனமாசு உடையோர், கட்டாய ஒய்வு கொடுக்கத் துடிக்கின்றனர்!

கட்டாய ஒய்வு கொடுப்பதற்கு இது மிசாக் காலமல்ல என்பதை அவர்கள் உணர்வது நல்லது. மிசாக் காலத்திலேயே ஒய்வு கொள்ள மறுத்து நறுமணம் பரப்பிய, என்றும் வாடாமலர் அது என்பதையும் ஆட்சிக்குப் புதியவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

சர்க்காரியா கூறிய பரிந்துரைகள் வழக்குகளாக மாறி நீதிமன்றம் ஏறு முன்பே, 'இது தான் தண்டனை என உறுதிப்படுத்தி வேலூர்ச் சிறையா, பாளையங் கோட்டையா என்பது நான் விவாதத்திற்குரிய கேள்வி என்பதுபோல் நீட்டி முழக்குகிறார் இந்த நாட்டு நிதியமைச்சர்!

வேலூரும் பாளையங்கோட்டையும் விளையாட்டு அரசியல் நடாத்துவோருக்குப் பூதாகாரமாகத் தோன்றுவது இயற்கையே! ஆனால் ஆலகால விடத்தைக் கண்டத்தில் ஏந்திய சிவனைப்போல் நாட்டு நலன் கருதி எதனையும் ஏற்கத் துணியும்ஒரு தியாகத் தலைவனை அவை என்ன செய்யும்?

'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை
எமமை மாட்ட நினைக்கும்
சிறைச்சாலை'

என்ற பாடல் வரிகளை அவன் காலில் நகம் முளைத்த காலந்தொட்டுப் பாடி வருபவன்:

கட்டாய ஒய்வு—

சிறைக் கோட்டம்—

இந்த இரண்டையும் நம்பித்தான் இன்றைய தமிழக ஆட்சி நடக்கிற தென்றால், இப்படியொரு கேலிச் சித்திரத்தை, ஆட்சி என்ற பெயரால் எதற்குத்தான் தயாரித்தாரோ மாண்புமிகு எம் ஜி ஆர். என்று எண்ணி வியப்பதைத் தவிர வேறு வழியில்லை!

செ. கந்தப்பன்

எண்ணற்ற பழிகள். இழிமொழிகள். குற்றச் சாட்டுகள், வழக்குகள் ஆகிய அம்புகளால் துளைக்கப்படாதஅந்த மலரை, வெறும வாய்ச் சொல் வீரத்தால் கொய்து விட முடியும் என நினைப்பது பகற் கனவு' மாண்புமிகு மனோகரனுக்குப் பிடித்த மொழியில் கூறுவதானால் அப்படி நினைப்பவர்கள் முட்டாள்கள் சொர்க்கத்தில் வாழ்கிறார்கள் என்றுதான் பொருள்!

வெய்தான உணவை உண்ணுவதாலன்றி வேறு வகையில் வியர்வை சிந்தி அறியாதவர்கள்; உழைப்பால் வியக்கும் உத்தமர்க்கு ஒய்வு தரப் போகிறார்களாம்!

சூறைக் காற்றுக்கு—
பருவ மழைக்கு—
குளிர் தென்றலுக்கு—
அலைமோதும் கடலுக்கு—
ஒளிக்கதிர்களை உமிழ்ந்து
வரும் பகலோனுக்கு—
நிலவைப் பொழியும
வானுக்கு—
தாய் மடி நோக்கித் தாவும்
கன்றுக்கு—
அருவியின் வீழ்ச்சிக்கு—
மல்லிகையின் மணத்திற்கு.

இன்னோரன்ன பிற இயற்கை நியதிகளுக்கு ஒய்வுதர முடியுமானால், தமிழினம் வளரத்தான் தேயும் தலைவனின் ஆர்வ உந்துதலையும் சிறைப்படுத்த முடியும்!

படுத்தட்டும்! அதன் பிறகு, அவர்கள் படும்பாட்டை இந்த நாடு பார்க்கும்!

இனத் தலைவன் இயக்கத்தை ஒடுக்கட்டும்!

பின்னர்,

அந்த இனப் பகைவர் நடுக்கத்தை இந்த நாடு சிரிக்க நாம் பார்ப்போம்!

நேரிய அரசியல் நடாத்தத் தெரியாதவர்கள், 'நேர்ந்து விட்டது எம் அரசியல் எதிரிக்கு விபத்து' எனப் பெட்டைத் தனமாகக் கொக்கரிக்கின்றனர்!

இல்லையென்றால், கறுப்புக் கொடி காட்டியதற்குக் கொலைக்குற்றமா சாட்டும் ஓர் அரசு?

பட்டப் பகலில் — பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியில் —நட்டநடு வீதியில்.. காவலர்கள் புடைசூழ—கலைஞர் இந்திராவைக் கொல்லச் சதி முயற்சி செய்தார் என்று வழக்குப்போட எந்த மடையனாவது இதுவரை துணிந்துள்ளானா இந்த நாட்டில்? அல்லது எந்த நாட்டிலாவது?

மடையர்கள் செய்யக் கூசுவதை இந்த மாநில ஆட்சி துணிந்து செய்கிறது!

திருக்குவளை மலரை வாதத்தால் வீழ்த்த முடியாதவர்கள். சதியால் பறிக்கப் பார்க்கிறார்கள் என்பதை இன்று இந்த நாட்டுப் பாமரனும் புரிந்து வைத்துள்ளான்! வாக்களித்த மக்களுக்கு வாழ்வு கொடுக்க வகை புரியாதவர்கள் தம் கையாலாகத்தனத்தை மறைக்க வசைபாடுவதில் கைதேர்ந்து வருகிறார்கள்!

வாடாத மலரின் வடியாத புன்னகையில் — புத்துலகம் காணப் புறப்பட்டு விட்ட தமிழர் பட்டாளம் தனது பணி முற்றுப் பெறும்வரை ஒயப் போவதில்லை; ஒழியப் போவதில்லை! அந்தப் படைக்கு எதிராக வாய்ப்பறை அடிப்போர் வெல்லப் போவதும் இல்லை!

வாழ்க அந்த மலரின் தொண்டு!

தமிழினம் பூத்துக் குலுங்க —சிறக்கட்டும் அந்த மலரின் வாழ்வு!

மலர் நீங்கா மார்பன்!

[கவிஞர் தமிழ்மறைச்சித்தன்]

கடி(த) முரசு ஒலித்தல் ஒல்லாக் காலை
கடிமண நெடுந்தொலி கலவாக் காலை
முற்றத்துச் செயலர் முண்டிலர் மோதலர்
சுற்றத்து நல்லார் கூடிலர் குழைந்திலர்
தூதுவர் யாரும் துதைந்திலர் ஆங்கு,
காதல் தீர்வுஇலா அன்னைமென் குரல் இல்லை
வட்டத்துச் செயலர் வட்டமிட்டு நாள்கேட்டுக்
கொட்டு முழக்கு இல்லை, கொடுகொள் ஓசைஇல்லை,
மாலைசூட வருவோர் வரிசை ஆங்கில்லை,
ஆலைத் தொழிலர் ஆர்ப்பரிப்பு ஆங்கில்லை
கட்டுரை கேட்டுக் காத்திருப்போர் யாருமில்லை
நெட்டுருப் போட்ட நெஞ்சத்துக் கவிஞர் இல்லை,
கோட்டைக் காவலர்கள் கொட்டாவி விட்டிட்டார்;
கரைபொரு நிறைஅலை ககனத்து எழும்பியபோல்
மறைபெறு ஆலைப்புகை வானம் மறைத்து நிற்கும்,
குன்றெனக் குத்தும் விண்சேர் கூடப்சூழ்
ஆறு ஊர்ந்தன்ன மக்கள் பெருவெள்ளம்
சீருடன் பொலியும் சிறப்புஆர் சாலைகள்,
தரைதனில் பறக்கும் புள்என ஊர்திகள்
நிரைதனில் செல்லும் நீள்நகர்ச் சென்னைத்
தலைநகர்ப் பிரிந்து தஞ்சைக் கோட்டை
மலைநல் பொருட்டாய்த் தலைவர் பிரிந்ததால்
இயல்பிற் கரியவிழி மைஉண்டு இருண்டதென
கயல்சூழ் மருதம் களித்திட, சூல்பெற்றுக்
கருஉயிர்த்தாள் வானப்பெண்; கலைஞரும் தமிழ்
உகுத்தார்
சொல்லம்பு ஓச்சிநின்றார் அடங்கிற்று அரவம்;
வில்லம்பு கைநெகிழ்ந்து வீணரும்உரை வேட்டார்.
தாழைமடல் மகிழ்வுற்று வாழைமடல் புல்லிற்று,
காளைகள் துள்ளின கன்னியவள் களிர்சென்றாள்;
கயலும் கமலமும் மயலுற்று ஆர்த்தன,
ஆரூர் வேந்தன் தேர்ஊர்ந்தான் என்றே
மன்னையும் மலர்ந்தது மாயூர் மயங்கிற்று;

எனவாங்கு

பின்னே பின்னே செல்லும் நெஞ்சே!
என்னே என்னே மயக்கமும் முயக்கும்!
கொள்கை கொள்கைஎனக் கொடுத்தும் குறையாக்
கொள்கை உடையார் 'குறித்தது கொள்ளாது
போகாக் குணம் உடையார் நோகா நெஞ்சத்தார்,
மலர்ப்புன் அலது பகைப்புன் அறியாதார்,
மலர்நீங்கா மார்பர், பணிநீங்கா வன்றோளர்
தலைவர் தங்குமிடம் தமிழ்தங்கும் என்றுது
நெஞ்சே திரும்புக! நீள்நெறிந் தேறே!

[குறிப்பு —தஞ்சை மாவட்டச் சுற்றுப்பயணத்தைத் தலைவர் தொடங்கியதும் அவரது இல்லம அமைதியானது அப் பிரிவாற்றாமைத் துயருள் தொண்டன் நெஞ்சும் வீழ்ந்தது; தலைவர் தங்குமிடம தமிழ் தங்குமிடம என்று சென்ற அவன் நெஞ்சொடு புலத்தல்.

கடல் அலைபோல் சென்னையின் ஆலைப்புகை சென்னை வானைச் சூழ்ந்தது. வெள்ளம்போல மக்கள் சாலையில் நகர்ந்தனர். பறவைகள் தரையில் பறக்க விரும்பியதுபோல் ஊர்திகள் ஓடின.

பெண்ணின் கரியவிழி மைதீட்டப்பெற்று மேலும் கருமை பெற்றதென வானப் பெண் கரு உயிர்த்தாள். அம் மழை நாணக் கலைஞர் தமிழ் பொழிந்தார். சொல்லம்பால் பாம்பும் பகையும் கூட்டமும் அடங்கின. பகைவர் அவரது சொற்கணிகளையே வேட்டையாடினர்.

தலைவர் உரைகேட்ட தாழைமடல் மகிழ்ந்து வாழை நாரேற்று. தாழை. மு. க. மகிழ்ந்தார். மணிஓசை கேட்ட காளையும் வாலிபரும்துள்ள, கன்னியர் களிப்புறக் கன்னித் தமிழ் புதிய இலக்கியத் தளிர் ஈன்றாள். மன்னார்குடியும் நாராயணசாமியும், மாயூரமும மகிழ்ந்தனர்.

கேட்பவர்க்கு கொள் - கை - கைநிறையக் கொளகை என்று கொடுப்பார். கோட்பாடு கொள் கைஎன்பார். குறித்துவந்த கோட்டைப் பிடிப்பார். குறித்தபடி வளர்ச்சிநிதி வாங்காமல் போகார். தொண்டரும் செயலரும் எந்நேரமும் அவரது மார்பில் போர்த்திக் கொண்டே இருப்பதால் மலர் நீங்கா மார்புடையார் அவரது பின்னால் சென்றுவிட்ட தன் நெஞ்சைத் திரும்ப அழைக்க முயல்கிறான் தொண்டன்.]

வாழ்க நம் தானைத் தலைவர்!

எஸ். ஜே. சாதிக் பாட்சா

நமது கழகத்தின் தலைவரும், தமிழினக் காவலருமான டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இன்று வயது ஐம்பத்தைந்து என்ற செய்தி கேட்டு மகிழாத தமிழர்கள் இருக்கமுடியாது!

தன்மான இயக்கம் கண்ட தந்தை பெரியாரும், திராவிட முன்னேற்றக் கழகம் கண்ட பேரறிஞர் அண்ணாவும் இன்று நம்மிடையே இல்லை. அவர்கள் தந்த இலட்சிய தீபத்தைக் கையிலேந்தி, அது அணையாமல் காத்து இன்று நமக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்து நடத்திச்செல்லும் ஒரே தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான்.

அந்தத் தானைத்தலைவருக்கு இன்று பிறந்த நாள்! அவர்தம் உடன் பிறப்புக்களுக்கெல்லாம் இன்று திருநாள்!

நம் கழகக் குடும்பத்துக்குத் தலைமை ஏற்று கடமை கண்ணியம் கட்டுப்பாடு காத்து தமிழ் வாழவும், தமிழினம் தலைநிமிர்ந்து நடக்கவும் தமிழகத்திற்கு ஒளிமயமான எதிர்காலம் பிறக்கவும் அண்ணா வழியில் அயராது உழைத்துவரும் நம் கலைஞர் அவர்களை நாமெல்லாம் நெஞ்சார வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறோம்!

வாழ்க கலைஞர் பல்லாண்டு!

வளர்க அவர்தம் நற்றொண்டு!

வாழ்க நீ தமிழர்க்காக!

(புலவர் அருண்மொழி)

அழித்தெழுதா ஓவியம்நீ! அஞ்சு கத்தாய்
அருஞ்செல்வன்! இயக்கத்தின் வெற்றித் தூண்நீ!
விழிப்புணர்வைக் கலையுலகில் கொண்டு வந்து
விந்தையினைச் செய்தவன்நீ! புதுமை நீயே!
எழில்கொஞ்சும் தமிழ்மொழியைக் காப்ப தற்கு
இளமைமுதல் போராட்டம் செய்த வன்நீ!
எழிலுநீவ! எங்கலைஞு! என்றென் றும்நீ!
இமயம்போல் உயர்வடைந்து வாழ்க நன்றே!

உனைவெல்ல அரசியலில் இன்னும் இங்கே,
ஒருத்தருமே பிறந்ததில்லை! வீணுக் காக,
உனைவெல்ல முயற்சிப்பார் தோற்றுப் போவார்!
உணர்ச்சியித் தமிழரின்று திருந்தி விட்டார்!
உனைவிட்டால் தமிழர்க்குத் துணையு மில்லை!
உயர்வில்லை! வாழ்வுமில்லை! எனவே எங்கள்
நினைவகத்தில் நீங்காத கலைஞு ரேறே!
நெடுநாட்கள் வாழிய நீ தமிழர்க் காக!

அண்ணாவின் கொள்கையிலே சிறிதும் மாறா
ஆற்றலுடன் கழகக்கற் கோட்டை தன்னை,
மண்ணாண்ட மூவேந்தர் ஒன்றாய்ச் சேர்ந்து
மாப்பகைவர் தாக்குதலை வென்ற தைப்போல்,
புண்ணாக நெருக்கடிமுள் தைத்த போதும்,
புலியாக அதுமாறி பாய்ந்தப் போதும்,
கண்ணகைக் காத்தவனே! கரிகாற் சோழா!
களிப்புடனே வாழியநீ! கழகம் காத்தே!

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணை முறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்!

H.O. 41 ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ணா மடம்சாலை, சென்னை-28

திறமையுள்ள ஆண் - பெண் கேன்வாசர்கள் தேவை!

நமக்கேயுரிய தனிப் பெருமை!

கலைஞர் எங்கள் தலைவர் என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ளும் உரிமை நமது கழக உடன்பிறப்புக்களுக்கு மட்டுமே உண்டு

அந்த உரிமையைப் பெறுவதற்காகவே இன்று ஆயிரம் பல்லாயிரமெனத் தோழர்கள் கழகத்தை நாடி வந்துகொண்டிருக்கும் காட்சியை நாள்தோறும் கண்டு கொண்டிருக்கிறோம்.

இடையிலே என்ன காரணத்தாலோ இழந்துவிட்ட அந்த உரிமையை மீண்டும் பெற்றிடத் துடிப்பவர்களையும் காண்கின்றோம்.

''கழகம் எமது பாசறை; கலைஞர் எம் தலைவர்'' என்று சொல்லிக் கொள்வதிலே கிடைக்கும் பெருமையை விட வேறொரு பலனையும் நாடாத கழக இலட்சிய மறவர்கள் அன்றும் சரி; இன்றும் சரி அந்தப் பெருமைக்குரிய உரிமையை எவ்வழியிலும் பறிகொடுத்து விடாமல் பத்திரமாகவே காப்பாற்றிவைத்துக் கொண்டிருக்கிறார்கள்

கழகத்தின் பெயரையும் கலைஞரின் பெயரையும் சொல்வதால் தாங்கள் எதிர்பார்க்கும் பலன் கிடைக்கும் என நம்பி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்ட புல்லுருவிகள் அற்ற குளத்து அறு நீர்ப்பறவைகள் எல்லாம் இப்பொழுது நம்மிடையே இல்லை.

தூய்மையான கழகத்தில் தூசுகளாக வந்து ஒட்டிக் கொண்டவைகளெல்லாம் 'நெருக்கடி நிலை' என்ற பேய்க் காற்றடித்ததும் பறந்தோடி விட்டன

கழக உலைக்களத்திலே பழுக்கக் காய்ச்சி அடித்து உருவாக்கப்பட்ட படைக்கலன்கள் தான் இப்பொழுது நமது பாசறையிலே அடுக்கி வைக்கப்பட்டுள்ளன

துருப்பிடித்த ஆணிகளும் உருப்படியில்லாத உதவாக் கரைகளும் காலத்தால் தூக்கியெறியப்பட்டு விட்டன. அப்பழுக்கற்ற கொள்கை மறவர்களின் கூடாரமாகக் காட்சியளிக்கும் நமது கழகத்தின் கொள்கைக் கோமானாக — தமிழினத்தின் ஒரே தலைவனாக — உலகத்தால் உற்று நோக்கப்படும் ஒப்பற்ற கலைஞர் திகழ்கிறார்

அவருக்கு அகவை ஐம்பத்தைந்து என்பதை அறிந்து அகமகிழாத உண்மைத் தமிழ் மகன் ஒருவன்கூட இருக்க முடியாது

அழுக்கு மனம் கொண்டவர்கள், பொறாமைப் புழுக்கத்தால் அலறிப் புடைப்பவர்கள் தன்னல வேட்டைக்காகவே கலைஞரைத் தலைவராக ஏற்றுக்கொண்டு வேட்டை முடிந்ததும் வேறு முகாம் தேடி ஓடியவர்கள் ஆகிய இனத் துரோகிகளைத் தவிர மற்றெல்லோரும் இன்று கலைஞரை வாயார, உளமார வாழ்த்துகிறார்கள்; போற்றுகிறார்கள்!

'போற்றுபவர் போற்றட்டும்; புழுதியவாரித் தூற்றுபவர் தூற்றட்டும்' தமிழ் இனத்துக்காக நான் மேற்கொண்டுள்ள இலட்சியப் பயணத்தை ஒருபோதும் நிறுத்திவிடப் போவதில்லை'' என்ற குறிக்கோளுடன் தலைவர் கலைஞர் அவர்கள் சூளுரைத்துச் செயல்பட்டு வருகிறார்.

தமிழினத்துக்கு இன்றுள்ள ஒரே பாசறை தி. மு. கழகம்; ஒரே தலைவர் கலைஞர். கழகத்தையும், கலைஞரையும் விட்டால் வேறு நமக்கு நாதியில்லை என்பதை எல்லாத் தமிழர்களும் புரிந்துகொள்ளும் காலம் நெருங்கிக் கொண்டுதானிருக்கிறது

வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சிகாண காலத்தால் உவந்தளிக்கப்பட்ட மாபெரும் தலைவர் தந்தை பெரியார்.

தமிழினத்துக்கு வாராது வந்த மாமணியாகக் கிடைத்த தன்னேரில்லாத் தலைவராம் பேரறிஞர் அண்ணா.

தந்தை பெரியாரால் — தளபதி அண்ணாவால் உருவாக்கி வளர்க்கப்பட்ட அவர்களின் வழித்தோன்றல்தான் இன்றைய நம் தானைத் தலைவர் கலைஞர்.

தந்தை பெரியாரையும் பேரறிஞர் அண்ணாவையும் காலம் நம்மிடமிருந்து பறித்துக் கொண்டுவிட்ட பிறகு, நமக்கு வேறு யார் இருக்கிறார்கள் கலைஞரைத் தவிர?

கலைஞர் மட்டும் பகுத்தறிவுப் பாசறைக்கு வாராது வேறு முகாமில் வளர்ந்திருப்பாரேயானால், அவருடைய அறிவாற்றலை செயல் திறனைக் கண்டு அவரை 'அவதாரப் புருடராகவே' ஆக்கியிருப்பார்கள்

பள்ளிப் பருவத்தில் பதினைந்து வயதில் பொது வாழ்வில் ஈடுபட்டு, கன்னித் தமிழில்கட்டுரைகள் தீட்டவும், கவிதைகள் புனையவும், நாடகங்கள் ஆக்கவும், மேடைகளில்பேசவும் தொடங்கிவிட்ட கலைஞரை, ஞானப்பாலுண்ட திருஞான சம்பந்தரின் மறு அவதாரம் என்றே வருணித்திருப்பர்.

கன்னித்தமிழுக்குக் காலம் வழங்கிய நன்கொடையாகவே பொன்னி வளநாட்டில் தோன்றினார் கலைஞர். காலத்தால் வெல்ல முடியாத தமிழ்க் கருவூலங்களை படைத்தார்; படைத்து வருகிறார்!

காளி வந்து நாவிலே எழுதாமல், கலைமகளின் கடாட்சம் பெறாமல், பார்வதியின் ஞானப்பாலை அருந்தாமல் ஒருவன் கவிஞனாகவோ, கலைஞனாகவோ, அறிவாற்றல் மிக்கவனாகவோ புகழ் பெற முடியாது என்னும் மூடநம்பிக்கையை முறியடித்தவர்கள் தாம் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும், கலைஞரும்.

தமிழ் இன உணர்வும், மொழியுணர்வும் கொண்ட பகுத்தறிவியக்கத்திற்குக் கலைஞர் தம்மை ஒப்படைத்துக் கொண்டு கடந்த நாற்பதாண்டுகளாக ஆற்றிவரும் பணிகள்தாம் அவரை ஒரு வரலாற்று நாயகனாக — யாராலும் வீழ்த்த முடியாத வலிமை மிக்க தலைவனாகத் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் பாதுகாப்பு அரணாக உருவாக்கியுள்ளன.

பெரியார், அண்ணா இல்லாத குறையைக் கலைஞர் ஒருவரால்தான் நிறைவு செய்ய முடிகிறது. அவரை வீழ்த்த நினைத்தவர்களெல்லாம் படுபாதாளத்தில் வீழ்ந்து படுவதை உலகம் பார்த்துக் கைகொட்டிச் சிரிப்பதைக் காண்கிறோம்

தமிழகத்தின் எதிர்காலம் கலைஞர் கையில்தான் உள்ளது என்பது உலகமே ஒப்புக்கொண்டுவிட்ட உண்மையாகும் இந்நிலையில் கலைஞரின் எதிர்காலத்தை சர்க்காரியா கமிஷனாலும், சதி வழக்குகளாலும் மாற்றிவிடலாம் என்று கனவு காண்பவர்களுக்குக் காலம் தான் பதில் சொல்லவேண்டும்.

தமிழகத்தின் வாழ்வும் தாழ்வும் கலைஞரின் வாழ்விலேதான் பிணைப்புண்டு இருக்கிறது. இதனைப் புரிந்து கொண்டவர்களெல்லாம் கலைஞரை வாழ்த்துகிறார்கள். தமிழகம் எக்கேடு கெட்டுப் போனால் என்ன என்று நினைப்பவர்கள் கலைஞரை வீழ்த்தச் சதி புரிந்து கொண்டும் சதிக்கும்பலுக்குத் துணை போய்க் கொண்டும் இருக்கிறார்கள்.

நாம் வாழ, நந்தமிழ் வாழ, நாட்டின் நலிவு நீங்க, மீண்டும் தமிழகத்தில் பொற்காலத்தை உருவாக்க, வாழ்க கலைஞர் பல்லாண்டு என வாழ்த்துவோமாக. ★

ஒரு கோடி வாழ்த்துக்கள்-உன் திருவடியில்!

1965ஆம் ஆண்டு இந்தியாவின் தென்கோடியில் புரட்சி வெடித்தது. உலகமே அன்றுவரை கண்டறியாத மொழிப் புரட்சி அது. இந்திமொழி ஆதிக்கப் தமிழகத்தில் புயலென வீசிக்கொண்டிருந்தது.

தாய்மொழி தமிழே எங்கு அழிந்து ஒழிந்து விடுமோ என்று தமிழர்கள் அனைவரும் எண்ணி அஞ்சிக் கொண்டிருந்தனர்.

"செந்தமிழுகுத் தீங்குவந்த பின்னும்இந்த
தேகம் இருந்தொரு இலாபமுண்டோ"

என்று எண்ணிப்பார்த்தனர். சில இளைஞர்கள் தமிழ் உணர்ச்சி அவர்களுக்குள் தணலாய் தகித்தது! இன உணர்ச்சி அவர்களுக்குள் எரிமலையாய்ப் புகைந்தது

இந்த மண்ணின் நான்கு கோடி தமிழ் மக்களும் தமிழ் மொழியின் எதிர்காலம குறித்து ஏக்கங்கொண்டு-தூக்கமிழந்திருந்த காலம் அது

பிரான்சில் பாஸ்டிலி சிறை தகர்க்கப்பட்டதற்கு நிகராகவும், இரஷ்யாவில் குளிர்கால அரண்மனை கொளுத்தப்பட்டதற்கு நிகராகவும், இந்தியின் அரக்கத்தனத்திற்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தது தமிழ்ப் படை.

அடக்கு முறைகள்! தடியடிகள் துப்பாக்கிச் சூடுகள் அப்பாவி மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம். தமிழகமெங்கும் கொதிப்பு! தகித்தெழுந்தது நெருப்பு!

இந்தி அரக்கியைக் கட்டிப் போடுவதற்கு எங்கள் தமிழகத்துத் தாய்மார்கள் தங்கள் தாலிக் கயிறுகளைக்கூட கழற்றிக் கொடுத்தார்கள்

தமிழன்னையின் கூந்தலின் பூக்கள் குறைந்துவிடாதிருக்க எத்தனையோ பூவையர் தம் கூந்தலில் இருந்து பூவறுத்துக் கொடுத்தார்கள்.

அன்னை யிட்டதீ அடிவயிற்றிலே
முன்னை யிட்டதீ முப்புரத்திலே
யானும் இட்ட தீ மூள்க மூள்கவே!

என்று பண்பாடி, பல தமிழ் வீரர்கள், அன்னையின் சன்னிதானத்தில், தங்களையே கற்பூரமாகக் கொளுத்திக் கொண்டு எரிந்தார்கள்!

அப்படி எரிந்த பேர்களில் ஒருவன் தான் வீரமறவன் விருகம்பாக்கம் அரங்கநாதன் அவன் இந்த மண்ணின் அழுக்குப் போகத்தான் குளித்தான், ஆமாம்! தணலில் குளித்தான்.

முந்தி எரிந்தான் ஒரு நந்தி அது கதையோ-வரலாறோ-கண்டு சொல்ல முடியாது.

ஆனால், 'உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு' என்று புரட்சிப் பண்பாடும் சின்னச்சாமியின் பரம்பரைக்காரன்; தம் கண் முன்னே தணலில் குளித்தான்! அவன் இட்ட நெருப்புத் துண்டுகள் கோட்டையிலே விழுந்து, அன்றைய நாற்காலிகளையும் சுட்டன.

அத்தகைய மறவர்களின் தன்னலங் கருதாத் தனித் தியாகத்தால்தான் அன்னைத் தமிழணங்கு அரசு கட்டில் ஏறினள்!

அந்தத் தமிழ்த் தியாகிகளின் வீர நினைவுகளுக்கு—திராவிட முன்னேற்றக் கழகமும் அதன்பின் ஆட்சிப் பொறுப்பேற்ற அண்ணன் அரசும அஞ்சலி செலுத்தின; அதோடுமட்டுமா - அந்த மணித்தமிழ் மறவர்களின் குடும்பங்களுக்கு உரிய உதவிகளையும் செய்தன

தொண்டர்களை மதிக்கும்—மதித்துப் போற்றும் தூய உள்ளம் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுக்கும் அவரின் வழித்தோன்றல் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என்றும் குன்றியதில்லை.

தமிழகத்தின் தன்னிகரில்லாத் தலைவனாக விளங்கும் டாக்டர் கலைஞர். இன்று அகில இந்திய அரசியலிலும் கொடிகட்டிப் பறக்கிறார் என்றால் அதற்குக் காரணம் அவர் கொடி கட்டி வளர்ந்த தொண்டர் என்பதால்தான்.

தொண்டனாகவும், தலைவனாகவும் ஒரே நேரத்தில் விளங்கும் ஒப்பற்ற தன்மை பெற்றவர்! அவரின் தொண்டுள்ளத்திற்கும், தூய உள்ளத்திற்கும் ஓர் எடுத்துக் காட்டாக ஒரு நிகழ்ச்சி

வீரமறவன் விருகம்பாக்கம் அரங்கநாதன் தீக்குளித்து முடித்த சில திங்களுக்குப் பிறகு டாக்டர் கலைஞர் அவர்களின் பெயருக்கு நூறு ரூபாய் பணவிடை வந்தது. அதை விருகம்பாக்கம் அரங்கநாதனின் இல்லத்தில் உதவித் தொகையாகச் சேர்த்துவிடுமாறு கோரப்பட்டிருந்தது

பணவிடை பெற்ற மறுதினமே தலைவர் கலைஞர் அவர்கள். அந்தப் பணத்தை என்னிடம் அளித்து அரங்கநாதன் குடும்பத்தில் சேர்ப்பித்து விடுமாறு ஆணையிட்டார். கலைஞர் அவர்களிடம் பணத்தை வாங்கிக் கொண்டு விருகம்பாக்கம் நோக்கி

சா. கணேசன்

விரைந்தேன். வீட்டில் குழந்தைகளைத் தவிர வேறு எவரும் இல்லை அரங்கநாதனின் துணைவியார் வேலை செய்ய வெளியே சென்றுவிட்டதாகத் தகவல் கிடைத்தது. மீண்டும் மறுநாளும் இல்லம் சென்றேன். பார்க்க முடியாது ஏமாற்றத்தோடு வீடு திரும்பினேன். மூன்றும்நாள் கட்சிப் பணியாக கலைஞரைக் காண காலையில் அவர் இல்லத்திற்குச் சென்றேன். அவர் என்னைக் கண்டதும் கேட்ட கேள்வி, என்ன, பணத்தைச் சேர்த்தாயிற்றா? என்பதுதான். 'கடந்த இரண்டு நாட்களாக அவருடைய இல்லத்திற்குச் சென்றேன். காண முடியாத காரணத்தால் நீங்கள் கொடுத்த பணத்தை அவர்களிடம் சேர்ப்பிக்க முடியவில்லை' என்று பணிவோடு கூறினேன்.

"பணத்தைச் சேர்த்த பிறகுதான் என்னை நீங்கள் பார்க்க வரவேண்டும்" என்று உரத்தக்குரலில் கண்டிப்பான கட்டளையிட்டார் கலைஞர்.

அன்றே அரங்கநாதன் துணைவியாரைக் கண்டுபிடித்துப் பணத்தைச் சேர்ப்பிக்க விருகம்பாக்கத்துக்கு விரைந்தேன். மூன்றும் நாளும் ஏமாற்றமே. அம்மையார் வீட்டில் இல்லை. அக்கம் பக்கத்து வீட்டில் விசாரித்தேன், வயலில் வேலை செய்து கொண்டிருப்பதாக அறிந்தேன். தோழர் வி பி அகிலன் அவர்களை அழைத்துக்கொண்டு வயலுக்குச் சென்றேன்; அந்த அம்மையாரைக் கண்டோம். நேரில் பணத்தைக்கொடுத்துக் கையெழுத்துப் பெற்றோம். கலைஞர் உங்களிடம் அளிக்கச் சொன்னார் என்றோம். அந்த அம்மையார் கலைஞர் அவர்களின் கருணையை வியந்து மகிழ்ந்து நிதியைப் பெற்றுக் கொண்டார். நேராக கோபாலபுரம் பறந்தேன். அந்த அம்மையார் பணத்தைப் பெற்றுக் கொண்டதற்கான சான்றொப்பத்தினை கலைஞர் அவர்களிடம் காட்டிய பிறகுதான் அவர் நெஞ்சம் அமைதியுற்றது.

தொண்டனின் உணர்ச்சிகளையும், தொண்டுகளையும் மதிக்கும் அந்தத் தொண்டுள்ளத்தின் உயர்வினை எந்த வார்த்தைகளைக் கொண்டு எழுதுவது?

சூல்கொண்ட மேகம் வானத்து உச்சியிலே இருந்தாலும், பூமியை நோக்கியே தனது மழை முத்துக்களைச் சிந்தும்.

வாழைப்பூவும், குலையும் மரத்தின் உச்சியிலே உட்கார்ந்திருந்தாலும், மண்ணை நோக்கித்தான் தங்கள் பார்வையைச் செலுத்தும்.

அதைப் போலவே பதவியின் உயரத்தில் அமர்ந்திருந்தாலும்; தலைமைப் பொறுப்பில் தங்கியிருந்தாலும், டாக்டர் கலைஞரின் பார்வையும், எண்ணங்களும், செயல்களும் தொண்டர்களை, தாழ்த்தப்பட்டவர்களை அடுத்த வேளை உணவுக்கு உறுதியில்லாதவர்களைப் பற்றியே படரும்!

அந்தத் தமிழ்த் தலைவர் பிறந்து ஐம்பத்து நான்கு வசந்தங்கள் கடந்துவிட்டன, ஐம்பத்து ஐந்தாவது ஆண்டு நோக்கி அந்தத் தமிழ்க் குயில் கூவத் தொடங்கியிருக்கிறது

குயிலாக இருக்கும் அந்தக் குலத் தலைவனே, நமது விடியலை உயிர்ப்பிக்கும் சேவலாகவும் திகழ்கிறான்.

அந்தத் தங்கத் தலைவனின் தாள்களில் ஒரு கோடி வாழ்த்துப் பூக்கள் இன்று தூவப்படும்! என்னுடைய இதயச் செடியின் வாழ்த்துப் பூவும் அந்தத் தலைவனுக்கென்றே இன்று பூக்கிறது. ●

தேச நலனுக்காகப் பாடுபடும் கலைஞருக்கு

பிறந்த நாள் வாழ்த்துக்கள்!

★ ★ ★

வி. ஜி. பன்னீர்தாஸ்
சகோதரர்கள்

சென்னை.

கலைஞருக்கு எங்கள் நல் வாழ்த்துக்கள்!

லைன், ஆப்-டோன் மற்றும் பல பிளாக்குகள் சிறந்த முறையில் குறித்த நேரத்தில் குறைந்த செலவில் தயாரிக்கும் இடம்

சாமுண்டீஸ்வரி
பிராசஸ்

14 மகாலட்சுமி தெரு — சென்னை - 600017
தொலைபேசி - 440433

கால மாறுதலும் - கலைஞரும்!

நமது கழகத் தலைவர் கலைஞருக்கு 55ஆம் ஆண்டு துவங்கி விட்டதென அறியவும். அவருக்கென வாழ்த்துக்களைக் குவித்திடவும் தமிழகம் தலைநகரில் குழுமியுள்ளது. இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றில் காலம் ஏற்படுத்தியிருக்கும் மாற்றங்கள் மறக்க முடியாதவை. கடந்த கால் நூற்றுண்டுக்காலம் கவனத்திலும கணக்கிலும் கொள்ள வேண்டியதாகும் காலம் வழங்கிய கண்ணியமான புகழ் கலைஞரின் வாழ்வில் பல மாற்றங்களை மறக்க முடியாத வகையில் மதித்திருக்கின்றது. அவரது நண்பர்கள் பகைவர்களாகி 'சுகம் எங்கே' என்று தேடியலைந்த காலத்திலிருந்து 'கணக்குத் தீர்ந்தது' என்று முடிக்கப்பட்ட 1976 வரை எத்தனையோ சுவடுகள் இதயத்தில் உள்ளன.

தாயகம், தமிழகம், தமிழினம் இவைகளை எண்ணி வாழ்ந்துவரும் அவரை தன்னலம் படைத்தோர் தன்னடக்கமற்றோர் தாவிக் குதிப்போர் தண்டோராக்காரர்கள் தஞ்சமடைந்தோர், தலைவெட்டியான்கள் தூற்றித் திரிகின்றனர்.

கலைஞரின் கால்பிடித்து கருணைக்குக் காத்திருந்து, கண்ஜாடைக்காக விழித்திருந்து, விலாப்புடைக்கத் தின்று திளைத்தவர்கள்கூட அவருக்கு அறிவுரை கூறும் நிலை தமிழக அரசியலில்தான் இருக்க முடியும். வேறு எங்கும் எவரும் இவ்வளவு இடர்ப்பட்டதில்லை.

எத்தனையோ முதன் மந்திரிகள் இருந்திருக்கிறார்கள்—பார்வையிழந்து பாதிக்கப்பட்டு படுக்கையில் கிடக்கும் இந்தக் காலத்தில்கூட பழைய பஞ்சப் புத்தி பலருக்குப் போய்விடவில்லை. மயக்கம் தெளியும் போதெல்லாம் கலைஞரைத் தூற்றித்தான் — தூற்றினால் தான் பெயர் பத்திரிகையில் வெளிவருகிறது.

கலைஞருக்கு முன்னால் வலதுகாலை மண்டியிட்டுச் சலாம் போடுவதா, இடது காலை மண்டியிடுவதா—அல்லது நெடுங்கட்டையாக அவருக்கு முன்னால் விழுந்துவிடுவதா என்றெல்லாம கணக்குப் போடாமல் எல்லாவற்றுக்கும் தங்களை ஒப்படைத்துக் கொண்டிருந்தவர்கள்கூட துரோகம் செய்த பிறகு எதிரிக்கு அடியாட்களாகத் தங்களை விற்றுவிட்டார்கள். 'காலம் பொன் போன்றது; கடமை கண் போன்றது' என்ற பொன்மொழிக்குரிய கலைஞர் மட்டும் 'தூற்றுவோர் தூற்றட்டும்' எனக் கூறுகிறார். துச்சமென மதிக்கிறார்! கால மாற்றம் கண்ணீர்த் துளிகளைத்தான் தருகிறது—கலங்குகிறோம்! ஐம்பத்தைந்து வயதில் 40 ஆண்டுகளை நாட்டுக்கும் மொழிக்கும் இயக்கத்துக்கும் பெரியாருக்கும் அண்ணாவுக்கும நமக்குமாகத் தந்துவிட்டாரே!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் செழுமைக்காக, அதன் உலகப்புகழ் பெருமைக்காக கலைஞர் அவர்கள் அரும்பணியாற்றியிருப்பதை "மந்திரி குமாரி"யிலிருந்து மன்னார்குடியில் பாசிச எதிர்ப்பு மாநாட்டுக்கு அடிப்படை அமைத்துக் கொண்டிருந்தாரே அந்நாள்வரை எண்ணிப் பார்க்க வேண்டும் அதிகார வெறியர்களுக்கு அவர் அச்ச மூட்டினார். இரவோடு இரவாக சந்திக்க வருகிறேன் என்று மடல் தீட்டியவர்கள் எல்லாம் மன்னார்குடி' நடை பெறுவதற்கு முன்பே அவரது

மகுடத்தைக் சுழற்றுவதில் கடமையைச் செய்தார்கள். அடக்குமுறைப் புயலில்—அன்றைக்கு ஏற்பட்ட காலமாற்றத்தில் அவர் அணையாத விளக்காக நின்றார். ச. மான்யர்தான் எனினும் சாதனைகள் புரிந்தார்—சரித்திரம் படைத்தார். ஆனால், சதிக்குப் பலியானார். அரசியல் சாத்திரங்கள் அவருக்குத் தெளிவானவை. அகில இந்தியாவுக்கும் அவர் வழிகாட்டினார்.

சண்டிகார் நகரம் யாருக்குச் சேரவேண்டும் என்பதிலிருந்து காமராஜரை எங்கே எப்படி நல்லடக்கம் செய்ய வேண்டும் என்பதுவரை அவரது முத்திரைதான். ராஜ்பவனில் வேடிக்கை பார்க்க வந்த இந்திரா இந்தக் கால மாற்றத்தைக் கண்டார். பிரதமரோடு பேச இப்போது எனக்கு நேரமில்லை என்று சொன்னதைப் பெரிய அவமானமாக எடுத்துக் கொண்டார். அன்றைய இந்திரா — அதன் எதிரொலிதான் கழக ஆட்சியின் காலம் முடிந்தது! தொடர்ந்த காலத்தில் தொல்லைகளைத் தாங்கினார்!

கலைஞர் கண்ணீர் வடித்திருக்கிறார் கழகத்தவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைக் கேட்டபோது! மகனையும் மருமகனையும் எடுத்துக் கொண்டு மற்றவர்களையெல்லாம் உயிரோடு திருப்பித் தாருங்கள் என்று தான் கேட்டார். துணைவியாருக்குத் துன்பம், அப்போதும் அவர் துயரப்படவில்லை! அவரே சொன்னது போல் துகிலுரியப்பட்ட நிலை! துட்டர்களும் இழிமக்களும் எழுதிக்கொடுத்தபொய்ப் பட்டியல் என்னென்ன கொடுமைக்கு அடிப்படையானது என்பதை அவர் சட்டமன்றத்தில் சொன்னபோது உறுப்பினர்கள் கலங்கினர்—மனுப் போட்டவர்களுக்கு மகனில்லை. அவன் அடிப்பட்டு அழுததைப் பார்த்ததில்லை. வாடகை மனைவியும் வாரிசுக்கு மகனும் விலைக்கு வாங்கப்பட்டவர்கள்! ஆனால், விழியிலே நீர்சிந்தினாலும் தாளாத கலைஞர் துடிதுடித்துப்போன மகனைக் கண்டார். பேச முடியாத உண்மையைச் சொல்லத் தெரியாத ஓவியமாக கண்டார் மத்திய சிறைச்சாலை சொன்ன செய்தி கால மாற்றத்திலும் மறக்கக் கூடியதல்ல

இன்றைக்கு திகார் சிறையில் இந்திராவின்மகன் இடம் பிடித்துக்கொண்டதால் அந்த அம்மையாருக்கு அச்சம் வருகிறது. மூளைக் குழம்பிப்போன மூப்பனார்கள்கூட புலம்புகிறார்கள்! கலைஞரும் கழகமும் ரசித்து மகிழவில்லை.

திராவிட முன்னேற்றக் கழக அரசு அம்மையாரின் அரவணைப்பில் இருந்தது தான். கலைஞரைப்போல் ஒரு முதலமைச்சர் அருமையான நண்பர் கிடைப்பதும் அரிது தான். அவசரப்பட்டு நடந்த அநீதிகளுக்கும் அடாத செயல்களுக்கும் அவர் உடன்பட்டிருந்தால் கோட்டை நாற்காலி இன்றுவரை பறிபோயிருக்காது. மனுப் போட்டவர்கள் மண்டுகளாக மட்டுமல்ல — அடிமைகளாகவும் மாறிவிட்டதால்தான் தமிழகம் வெறியாட்டங்களைச் சந்திக்க நேர்ந்தது. வருத்தம் தெரிவிப்பதும் மன்னிப்புக் கேட்பதும் ஏற்றுக் கொள்ள வேண்டியவைகள் என்றால் இனிமேலும் ஏற்பட இருக்கும் கால மாற்றங்களுக்கு அன்றைய கண்காணிகளும் இடைத் தரகர்களும் பதில் கூறியாகவேண்டும். நம்ப முடியவில்லை. இஸ்மாயில் கமி

மதுரை கூடலரசன்

ஷன் வழங்கிய தீர்ப்புக்குஇன்று வரை மரியாதை இல்லையென்றால் துரோக புத்தியின் செயலுக்கு மாற்றம் ஏது?

சர்க்காரியா கமிஷன் விசாரணையில் கால மாற்றம் அந்த நீதிதேவனை மயக்கமடையச் செய்தது. ஒவ்வொரு கட்டத்திலும் பொய் மூட்டைகளைக் கொட்டினால் தான் கமிஷனுக்கே வேலை-மனுக் கொடுத்தவர்கள் மன்றத்திற்கு வரத் தயாராக இல்லை. காலம் பதில் சொல்லும் என்று கூறினர்! கழக வழக்கறிஞர்கள் கேட்ட கேள்விகளுக்கு சாட்சிகள் முரண்பட்ட தகவல்களையே தந்தனர். இருப்பினும் தரப்பட்டுள்ள தீர்ப்பின்மீது நடவடிக்கை வந்தால் நாடே சிரிக்கும்.

கலைஞர்மீது வழக்குப்போட்டுக் கதை முடிக்கத்துடிப்பவர்கள் ஷா கமிஷனது விசாரணைகள்—தீர்ப்புப்பற்றி எதுவும் பேச முடியவில்லை. வாயை இறுக மூடிக்கொண்டுள்ளனர். அலிபாபாக்களும் அவரது அறுபது திருடர்களும்கூட இந்திராவுக்கு முக்காடு போட்டு மறைக்கிறார்களே தவிர உண்மையின் முழுவடிவத்தைக் காணவில்லை.

இந்திராவின் பங்காளி பன்சிலால் நீதிபதியை, அதிகாரிகளை அமைச்சர்களைத் திட்டுகிறார். இந்திராவின் மகன் வழக்கறிஞரையே வாய்க்கு வந்த வார்த்தைகளைக் கூறித் திட்டலாம்! கேள்விக்குப் பதில்கூற இந்திராவே மறுத்து விட்டார்! சம்மன் அனு-பினால் கிழித்து எறிவது புனிதக் கடமை! கலைஞர்மீது பொய்ப் புகார் கொடுத்தவர்கள்கோர்ட்டுக்கு வருவதில்லை.

கோமாளி சர்க்கார் இராணுவத்தைக் கொண்டே எதிரிகளைச் சமாளிப்போம் என்று எச்சரிக்கிறது. காலத்தின் மாற்றம் கழகத்திற்குப பல கடமைகளை நினைவூட்டுகிறது. நெஞ்சுக்கு நீதி வழங்கிவிட்டு நெடுந்தூரக் கொடுமைகளைக் கண்டும் கவலைப்படாமல் கொடுமை புரிந்தோர் கண்ணீர் வடிக்கும் கோலத்தைக் கண்டு கலங்குகிறார்! காட்டிக் கொடுத்தவர்கள், கட்டித் தழுவியதை மறந்து கழுத்தை மறிக்கத் துடிப்போர் இவர்கள் அனைவரையும் சமாளித்துக் கொண்டிருக்கும் கலைஞருக்கு நமது இதயத்து வாழ்த்துக்களை தெரிவிப்போம்!

எங்கள் உயிர் நிலையே! வாழ்க!!

துள்ளுதமிழ் உரைநடைக்குச் சொந்தக் காரன்!
சொக்கிவிழ வைக்கும்சொற் பொழிவில் சூரன்!!
கொள்ளைகொள்ளை யாய்நயங்கள் எழுத்தில் சேர்ப்பான்!
சொஞ்சுமெழில் நளினமெல்லாம் பேச்சில் தோய்ப்பான்
வள்ளுவர்க்குத் தலைநகரில் கோட்டம் கண்டான்!
வரலாறு காணாத புகழைக் கொண்டான்!

உள்ளபடி உறவுக்குக் கைகொடுப்பான்!
உறுதியுடன் உரிமைக்குக் குரல்கொடுப்பான்!!
தன்மான இயக்கத்தின் தங்கம்; என்றும்
தரங்குறையாப் பகுத்தறிவுச் சிங்கம்! நாட்டின்
முன்னேற்ற நினைவகங்கள் அமைத்தான்! இன்ப
முத்தமிழில் இலக்கியங்கள் சமைத்தான்! எங்கள்
முன்னேற்றக் கழகவழி காட்டி! கொள்கை
முரசொலித்து இனவுணர்வை மூட்டி நிற்கும்
இந்நாட்டு அரசியலில் தேர்ந்த ஞானி!
இயக்கத்தை வளர்ப்பதிலே சிறந்த தேனீ!!
கண்ணொளியை வழங்கியவன், தொழுநோயாளர்
காப்பகங்கள் நிறுவியவன்; நிலப்பட்டாவாம்
மண்ணுரிமை நல்கியவன்; ஊன முற்றோர்
வாழ்வுபெற உதவியவன்; தாழ்த்தப் பட்டோர்
வண்ணமுற வாழஇல வசமாய் நல்ல
மனைகள் பல கட்டியவன்; அரசில் வேலை
பண்ணிநின்ற ஊழியர்க்கு நற்றுடுப்பப்
பாதுகாப்புத் திட்டத்தை அளித்த நல்லோன்!
நல்லவர்போல் வேடமிட்டு நடித்து நாட்டில்
நடமாடும் புரட்டர்முக மூடி தன்னைச்
சல்லிசல்லி யாய்க்கிழிக்கும் மறவன்; இந்தத்
தமிழகத்தின் முடிசூடா மன்னன்' என்றும்
வல்லபணி யாற்றுவதில் முதல்வன்! காலம்
வாய்ப்பாக நமக்களித்த ஒரே தலைவன்!
எல்லோரும் 'கலைஞர்' எனப் போற்ற நிற்கும்
எங்கள்உயிர் நிலையே! நீ வளர்க வாழ்க!!

—பாவலர் புள்ளம்பாடி வெற்றியழகன், எம்.ஏ.

அண்ணாவின் இதயமே வாழி!

காலத்தை வென்றவரே!

காவிய நாயகரே!

காலம் காட்டும் கருவியே!

கைம்மாறு கருதா கார் மேகமே

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல — தம்மை இகழ் வாரைத் தாங்கிடும் உள்ளம் பெற்றவரே!

கழக முதல்வரே-தமிழினக் காவலரே — உங்களை நான் வாழ்த்துகிறேன். வாழ்த்து வதும் வழித் தொடர்வதும் பொய்மைக்கோ புகழ்ச் சிக்கோ இல்லை. உண்மைக்கு; உயிரையும் அர்ப்பணித்து விட்ட உயர் தொண்டிற்கு

தலைவர்களாக ஆனவர் களுக்குப் பிறந்தநாள் வருவ தையும் அதனை அவர்கள் கொண்டாடிடும் வகையினை யும் பார்த்திருக்கிறேன். பல தரப்பட்டோரின் வாழ்த்துக் களும்வரும்; ஆலய அபிஷேகப் பொருள்களெல்லாம் கூட வரும். ஆலயங்களில் பூசை கள்கூட நடக்கும். அதனை பத்திரிகைக்காரர்களும் அச் சிட்டு வெளியிடுவார்கள்.

ஆனால், தங்களின் பிறந்த நாளை, தங்களை கழகத்தின் தலைவராக — தமிழினத்தின் காவலராக ஏற்றுக் கொண்ட நாங்களும் நாட்டு மக்களும் வாழ்த்திப் போற்றிக் கொண் டாடுகிறோம். இதற்குக் காரணம் நீங்கள் எங்கள் தலைவர் என்பதால் மட்டுமல்ல. நீங்கள் மக்கள் தலைவர் என்கிற பெருமை யாலும் மரியாதையினா லும் நீங்கள் தங்களை " இந்த மண்ணிற்கும் மண்ணின் மைந்தர்களுக்கும் அன்னைத் தமிழிற்குமாக ஒப்படைத்து விட்ட உயர் தியாகத்தை மதித்துப் போற்றவும்தான்.

"இந்தியாவின் கடைசி ஜனநாயகவாதி" என, நம் அண்ணால் பாராட்டிக் கூறப்பட்ட பண்டித நேரு வின் பிறந்தநாள் "குழந்தை கள் தின'மாக அறிவிக்கப் பட்டது. அவருக்குக் குழந்தை கள் மீது அளவுகடந்த பிரியம் என்பதால்!

இந்தியத் துணைக்கண்டத் தின் குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் இராதா கிருஷ்ணன் பிறந்தநாள், "ஆசிரியர் தின'மாக அறிவிக் கப்பட்டது. அவர் அந்தத் துறையில் சிறப்பாகப் பணி யாற்றி பொது வாழ்வுப் பணியில் மேன்மையுற்றவர் என்பதால்.

நமது இதய தெய்வம் பேரறிஞர் பெருந்தகை அண்ணா பிறந்தநாள் காவல் துறையினரின்பணிக்குப்பொற் பதக்கம் வழங்கி அவர்களுக்கு உயர்ந்த மரியாதை செலுத் திடும் நாளாக இருந்து வருகின்றது.

அண்ணாவின் இதயமாக ஆகிவிட்ட தங்களின் பிறந்த நாளிலோ — பிச்சைக்காரர் அவலநிலை அகற்றப்பட, "பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்" பிரகடனமாயிற்று.

விழிகளிருந்தும் ஒளியற்றி ருந்தோர் பார்வை பெற்றுப் பலன் பெற்றனர். கண்களில் ஒளிபிறந்திட வழி தெரிந் திட "கண்ணொளி வழங்கும் திட்டம்" காண வைக்கப்பட் டது.

மனிதனை மனிதன் வண்டி யில் வைத்து மாடாக இழுத்த இழி நிலை அகற்றிட; கை ரிக்ஷாக்களை நீக்கி 'சைக்கிள் ரிக்ஷா' பெற்றிடும் திட்டம் மாநிலம் முழுமைக்கும் ஆக் கப்பட்டது.

உடல் அங்கஹீனர்களாக இருப்பவர்கள் உழைத்து வாழ "உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம்" உரு வானது.

அனாதைச் சிறுவர்களும், ஆதரவற்ற கைம்பெண்களும் தங்கள் வாழ்க்கையில் ஆதர வும் புது வாழ்வும் பெற்றிட "கருணை இல்லங்கள்" கட்டித் தரபபட்டுள்ளன. இவைகளை யெல்லாம் பெற்றுக்கொண்ட நாட்டில் நல்ல இதயங்க ளெல்லாம் தங்களை வாழ்த்தி வணங்குகின்றன.

கால் சிலம்பு ஒன்றைக் கொண்டுவந்தான் கண்ணகி யின் காவலன் கோவலன் அந்நேரம் காணொழிந்த சிலம்பு இதுவே என்று, அவன் கள்வனாக்கப்பட்டு கொலைக் களத்தில் தலை அறுக்கப்பட்டு, தரையில் சவமாகச் சாய்க்கப் பட்டான் மதுரைக் காவலன் பாண்டியன் நெடுஞ்செழிய னால் நீதி விசாரணை எதுவு மின்றி தன் நெஞ்சில்நிறைந்த கணவன் கொல்லப்பட்டதால் குமுறி எழுந்தாள் கோவல னின் நாயகி.

கொலு மண்டபம் நோக் கிச் சென்றாள். கொற்றவன் பாண்டியன் நெடுஞ்செழிய னிடம், காணொழிந்த காற் சிலம்பிலிருந்தது முத்துக்கள் தன் கணவன் கொண்டுவந்த கால் சிலம்பிலிருந்தன — மாணிக்கப் பரல்கள் எனத்தன் கையில் கொண்டுவந்த—சிலம் பிலிருந்து மாணிக்கப் பரல்க ளைக் கொட்டிக் காட்டிகொற் றவன் புரிந்துவிட்டக் குற்றத் தைப் புரிய வைத்தாள். நீதி விசாரணை எதுவுமின்றி நிரப ராதி ஒருவனைக் கொன்று விட்டதைக் கண்டு சிம்மா சனத்திலிருந்து விழுந்து அவ னும் செத்தான்.

பூம்புகார் கண்ட சோழனும் தங்கள் மீதும் நமது கழக அரசின் மீதும் கழகத்தவர் மீதும் வீண்புகார் கிளப்பினர் விபீஷணர்கள், பொறாமைக்காரர்கள் விட்ட விஷமூச்சிலே நம்மை நாமே யாரெனக் கேட்டுக் கொள் ளும் அவல நிலைக்காளானோம். ஆட்சி அகற்றப்பட்டது. அவ சரச் சட்டத்தால் கழகத்தை அழித்தொழிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன விசா ரணைக் கமிஷன்கள் சதி வழக்குகள் போன்ற என்ன வெல்லாமோ எண்ணற்றவை.

அத்துணையும் சந்திக்கும் ஆற்றல் மிக்கவராக அறிவுத் திறன் பெற்றவராக இன்று விளங்குகிறீர்கள். கண்ணகி யின் கையிலிருந்த அவளின் கால்சிலம்பு நெடுஞ்செழியப் பாண்டியனுக்கு உண்மையை உணர்த்தி நீதியை உலகுக்குக் காட்டியது போல உங்களின் முயற்சியும் உலகுக்கும் மக்க ளுக்கும் காட்டியே தீரும் நீதிக்கு நடந்திடும் போராட் டம் நிச்சயம் வெற்றிபெறும்.

எனவே தலைவா நான் கூறும் வாழ்த்துக்களை கழகத் தவருடையதாக ஏற்றுக் கொள்ளுங்கள். இன்னல்கள் எதுவாயினும் துன்பங்கள் தொடர்கதைகளானாலும் கன்னல் தமிழும் கண்மணி போன்ற கழகமும் காக்கப் பட்ட உங்கள் தலைமையில் ஓயாது பணியாற்றுவோம். உறுதி உறுதி.

த. பே. கிருட்டினன்



புருஷன் ....

(7ம் பக்கத் தொடர்ச்சி)

பரபப்பான கண்களிலும் சிவந்த உதடுகளிலுமே மண் டிக்கிடந்தன. இருந்தாலும் திண்ணாயிரத்துக்கு அவளைப் பிடிக்கவில்லையே! ஏன்? எல் லோருக்கும் இது ஒரு புதிர் தான். பெண் ஒரு வீணை; இன்ப வீணை. அதன் தந்தி களைத் தட்டி எழுப்பத் தெரிந் தவர்களுக்குத்தான் வீணையின் ரகசியமும் மகிமையும் தெரி யும். காண்டா மிருகத்தைப் போல் வீணையில் மோதி னால், விபரம் தெரியாத குழந்தையைப்போல் அதன் தந்திகளை முறுக்கிவிட்டால் வீணையின் சக்தியை அறிந்துகொள்ள முடியுமா?

திண்ணாயிரம் அவனது குடும்பத் தகராறை வழக்கு மன்றத்திற்குக் கொண்டுவந்து விட்டான்.

⁂ ⁂ ⁂

"எனக்கும் இரண்டாண்டு களுக்கு முன் எனக்கு வாழ்க் கைப்பட்ட குருவம்மாவுக்கும் குடும்பத்தில் அடிக்கடி சச்சரவு ஏற்படுவதால் அவளை என்னிட மிருந்து பிரித்துக்கொள்ள விரும்புகிறேன்" என்று திண் ணாயிரம் தன் கருத்தை வழக் கறிஞர் மூலம் எடுத்துச் சொன்னான்.

ஆனால் குருவம்மாவோ. "நான் விவாகரத்தை விரும் பவில்லை. சாகும்வரை அவர் தான் எனக்குக் கணவர்" என்று தெரிவித்தாள். பழைய காதல் கடிதங்கள், புகைப் படங்கள் எல்லாவற்றையும் நீதிபதி முன் விரித்துவைத் தாள் குருவம்மா.

"எப்போ பாலிலே உப்பு விழுந்தாச்சோ, அப்புறம அந்தப் பால் எதுக்கு உப யோகம்?இறுக்குப்பொண்ணு. நா இருக்கிறவரை இருட்டிலே சாப்பிடுவே: அதுக்குப் பொறகு உன்னே யாரு கவ னிக்கப் போறாங்க? பேசாமெ ஜீவனாம்சம் கேளம்மா!" செண்பகம் குறுக்கே பாய்ந்து இப்படி ஒரு மடியைத் தூக் கிப் போட்டான். குருவம்மா வின் வழக்கறிஞருக்கும் அது தான் நியாயமாகத் தெரிந் தது. இருவரும் குருவம்மா வைக் கட்டாயப்படுத்தி திண் ணாயிரத்திடமிருந்து மாதம் ஐம்பது ரூபாய் வாழ்க்கைப் பணம் கேட்க வைத்து அதையே தீர்ப்பாகவும் ஆக வைத்துவிட்டார்கள். இனி மேல்திண்ணாயிரத்திற்கும் குரு வம்மாவுக்கும் மானசீகமான உறவுதான். ஒருதலைக் காதல், நிறைவேறாத காதல், இழந்த காதல் — என்று அதற்கு எந்தப் பெயரைச் சூட்டிக் கொண்டாலும் பொருள் ஒன்றுதான் — சட்டப்படி இவ ருக்குமிடையில் உறவு இல்லை.

(தொடரும்)

அவர் இதய

3-ம் பக்கத் தொடர்ச்சி

தம் உடன் பிறப்புகளை எத்தி சையிலும் காண்கிறார். அவர் களைப்பற்றியே நினைக்கிறார் அதற்கு இது ஓர் எடுத்துக் காட்டல்லவா?

இதைப் போலவே அவர் முதலமைச்சராகவிருக்கும் காலம்—நான் நடந்து வரு கிறேன். நலக் குறைவு கார ணமாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்த நான் நடந்துவருவதைத் தலைவர்— முதல்வர் பார்க்கிறார். அவ ருடைய கார் உடன் நிற்கி றது. முதல்வர் கார் திடீ ரென்று நின்றதும் முன்னும் பின்னும் பலர் திடுக்கிட்டு ஓடி வருகிறார்கள் எனது உயிரனைய தலைவர்—முதல் வர் 'என்ன இது? மருத்துவ மனையை விட்டு ஏன் வந்தீர் கள்? என்று கனிவும் கோப முமாக வினவுகிறார்,

இதையெல்லாம் நினைக்கிறேன்- அப்போது நமது குடும்பத் தலைவர் அறிஞர் அண்ணா ஒரு முறை "தம்பி கருணாநிதியை தூக்கத்தில் எழுப்பி இது இன்ன ஊர் என்று கூறினால் அங்கு கழகத்தவர்கள் யார் யார் என்பதை மடமட வென்று கூறி விடுவார்' என் றார்கள்,

அதை இன்றும் காண முடிகி றது அவருடைய இதயம் கழக உடன் பிறப்புக்கள் நிறைந்து வாழும் உறை விடம்.

ஆம் கழகம் வாழ எங்கள் தலை வரே கலைஞரே நீங்கள் நீடுழி வாழ்க வாழ்க!

தலைவா நீ வாழி!

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

என்னைக் கவிதை ஒன்று படைக்கச் சொன்னால் உன்னைத்தான் நான் கவிப் பொருளாக்குவேன்.

என்னைக் கதையொன்று எழுதச் சொன்னால் உன்னைத் நான் கதைநாயகனாக உலாவ விடுவேன்

பாட்டொன்று யாரேனும் பாடச் சொன்னால் அப்பாட்டுடைத் தலைவன் நீயன்றி வேறு யாராக இருக்க முடியும்?

காவியம் ஒன்று செய்ய, நான் கனவு காண்கிறேன்; அக்காப்பியத் தலைவனாக உன்னையே நினைவு கூர்கிறேன்.

கடவுள்— வாழ்த்தொன்று பாடச் சொன்னால் என் கண்மூடி உன்னையே கடவுளாக்குவேன்; சிற்பம் ஒன்று செய்ய நான் முனைந்தால் உன் பொற்புருவமே அங்கு பூரித்து உருவாகும்.

என்னால் கோயில் ஒன்று கட்ட இயலாவிட்டாலும் என் இதயத்தைக் கோயிலாக்கி என் எண்ணமெல்லாம் பொன்னாகி வடித்து உன்னை மூல விக்கிரகமாக்கிப் பூஜை செய்வேன். என்னை மாலையொன்று தொடுக்கச் சொன்னால் நீ இந்த மண்ணுக்குச் செய்த தொண்டுகளையெல்லாம் அங்கே மலர்களாக்குவேன்.

என்னை வரம் ஒன்று கேட்கச் சொன்னால் உன் வாழ்நாள் நீண்ட நாளாகவளர வேண்டுமென வழிபாடு செய்வேன்.

பூக்குவளையில் பூத்த புண்ணிய மலர்நீ யென்றாலும்,

★★★★★-★★★★★★★

குடந்தை
செல்வி எம். ஏ,

★★★★★★★★-★★★★

புவியெங்கும் புகழ்மணக்கும் போர் மறவன் நீயன்றோ!

கால வரலாற்றில் உன்னைக் கணிப்பது மிகக் கடினம், ஞாலம் போற்றும் நவநாயகன் நீ. இந்திரனையே ஜாலம் செய்து ஏமாற்றிய "இந்திர ஜாலன் நீ"

தாகம் தீராத தமிழ் வெறியூட்டும் "கள்"வன் நீ.

தன்னிகரற்ற காஞ்சித் தலைவனின் தானைத் தளபதி நீ.

கலைஞர்கள் என்றும் இளைஞர்கள் என்று உன்னைப் பார்த்துதான் கூறினார்களோ!

பருத்திச்சுடர் போன்ற உன் விழிகள் பார்வையாளர்களைப் பார்த்துப் பார்த்துச் சிவந்தனவோ, பஞ்சினு மெல்லிய நின் கரங்கள் கை எடுத்து வணங்கி வணங்கிச் சிவந்தனவோ,

நீ உறங்கும் நேரம் எது வென்று நான் வியக்கின்றேன்; உன் ஆர்வத்துடிப்பு கண்டு நான் அயர்ந்துபோகின்றேன்; நீ எங்கள் நடுவில் இருப்பதை எண்ணி எண்ணி இதயம் களிக்கின்றேன்.

தனிமரம் தோப்பாகாது என்று யாரோ சொன்னார்களாமே, இங்கே தனி ஒருவன் ஒரு சகாப்தமாகின்றானே. ஆலமரத்திற்கென்னதோப்பா வேண்டும்? சாதி வெறி ஒழிய வேண்டுமென்று சாடினார், ஜாடை மாடையாகத் தம்பிக்குத்தானே உபதேசம் தனக்கில்லை என்றார்

இதிலும் நீ முன்னோடி வழி காட்டியாய் முறுவல் பூக்கின்றாய், சூரியன் எங்கே உன்னை வென்று விடுவானோ என்று அவனையே கொடி கட்டிப் பறக்க விட்டவனல்லவோ நீ!

கால மெல்லாம் உனக்கொரு கோலம் இன்பக் காவியங்கள் யாவும் நீ சொல்லும் பாடம். ஆண்டுக்கொரு நாள் தான் நீ பிறந்த நாளோ!

ஆர்ப்பரித்துப் பூக்கும் அலைகளுக்கு எந்த நாள் பிறந்த நாள்?

இருப்பினும் நீ பூத்த இந் நாளில் உன் புகழ் உலகெங்கும் சிறக்க; உன் கொள்கைகள் கொடி கட்டிப் பறக்க நின் கடமை வழி நாங்களெல்லாம் கைகோத்து நிற்க—

உன் கண்ணியம் கடல் போல பரக்க — கட்டுப்பாட்டைக் கழகத்தவர் ஒட்டு மொத்தமாய் உறுதியாய் ஏற்க — பன்னீர்ப்பூ கோலமிட்டு, பக்கமெல்லாம் செந்தாமரை மலர் வரிசை வைத்து மனமெல்லாம் மங்கள ராகப பாட்டிசை யொலித்து, உன் பிறந்த நாள் வாழ்த்துப் பாடுகிறோம்.

பெருமிதத்தால் ஆனந்தக் கூத்தாடுகிறோம்.

பெருந் தலைவா! நீ வாழ்க! வாழ்க் பல்லாண்டு!

டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எமது இதய வாழ்த்துக்களைக் குவிக்கிறோம்!

Tel: JEKAyKAy; Phone: 679; (Bavani)

J.K.K

J.K.K. TEXTILE PROCESSING MILLS

J.K.K

POST BOX No. 55

KOMARAPALAYAM- 638 183

(via) ERODE.

With pleasure we have started our new Textile processing Mills, near New Cauvery Bridge, Komarapalym. We are doing cloth bleaching, dyeing and finishing works with most modern sophisticated machineries and well trained personnel, to the entire satisfaction of the customers.

We proudly announce that we are reputed processors in international market and 90% of our capacity is engaged in Export variety.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம், சென்னை -600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்; 'அன்பகம்' 1/104-B அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி441009